
கல்கி



LKI

மார்ச் 20, 1943

3 அண

16

நமது மாகாணத்தின் சகல பண்டங்களுக்கும்
புதிய போக்கு வரத்து சாதனங்கள்

கீழ்க்கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் உங்களுடைய வியாபார விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க ஏற்பாடு செய்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ ராமவிலாஸ் சர்வீஸ் லிமிடெட்

202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்.


போன்: மதராஸ் "8536" :: தந்தி: "ROADHAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:


1. சேரி ரோடு, சேலம்.
2. ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்.
3. கண்டோன்மெண்ட், திருச்சினாப்பள்ளி.
4. கிருஷ்ணராயர் தெப்பகுளத் தெரு, மதுரை.
5. ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோடு, பெங்களூர்.

——: *மார்க்கங்கள்* :——


1. மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2. மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3. மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4. கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5. கோயமுத்தூர் — கரூர் — திருச்சினாப்பள்ளி
6. சேலம் — நாமக்கல் — திருச்சினாப்பள்ளி
7. சேலம் — உளுந்தூர்ப்பேட்டை — கடலூர்
8. மதுரை — திருச்சினாப்பள்ளி — தஞ்சாவூர் — நாகை
9. மதுரை — திருச்சி — கும்பகோணம் — நாகை



உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.



கொலம்பியா
ஸ்பெஷல் வெளியீடு!
D.K.பட்டம்மாள்
பாடிய
இன்னிசைத் தமிழ்ப் பாட்டுகள்
GE.6082
இனி ஒரு கணம்
நின்னருள்
GE.6045
குமாரன்
திரைகடல்
GE.6001
யதுகுல திலக
அன்புடன்
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்
மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:
S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி.



விதியும் செல்வச் சுதந்திரமும்

முயற்சியின்றி ஒருநாளும் சுதந்திரம் கிடைக்காது. செல்வச் சுதந்திரம் வேண்டுமென்ற உங்கள் விருப்பத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அதற்காகத் திட்டம் வகுக்க உங்களுக்குச் சம்மதமா? அல்லது விதிப்படி நடக்கட்டும் என்று இருக்கப் போகிறீர்களா?

அதிருஷ்டப்படி நடக்கிறது என்று இருந்து விடுவதால், ஓய்வு வேண்டிய தள்ளாத காலத்தில், பெரும்பாலானவர்களுக்கு போதிய வருமானம் இல்லாமல் போய்விடுகிறது. இதற்குக் காரணம், அவர்கள் திட்டம் போடத் தவறியது; அல்லது திட்டம் போட்டும் அதன்படி நடக்கத் தவறியது. திட்டமோ முயற்சிகளோ இல்லாமல், ஒருவருக்கும் விதியின் கை எப்போதும் உதவி செய்வதில்லை.

உங்கள் செல்வச் சுதந்திரத்துக்காகத் திட்டம் வகுக்க இன்னமும் தாமதமாகி விடவில்லை. எவ்வளவு சீக்கிரத்தில் நீங்கள் அதை ஆரம்பிக்கிறீர்களோ அவ்வளவு அதிகமான பலன், பின்னால் உங்களுக்குக் கிடைக்கும்.

எங்களுக்கு எழுதினால் உங்கள் வருவாய்க்குத் தகுந்தவாறு திட்டங்களை வகுக்க நாங்கள் உதவி செய்வோம்.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரென்ஸ் கம்பெனி, லிமிடெட்

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங் :: எஸ்பிளனேட் :: சென்னை.

ஆஷலதாவின் அழகான சருமத்தின் இரகசியம் இதுதான்





"என் சருமத்தைப்பற்றி பிரத்தியேக கவலை நான் எடுத்துக்கொள்கிறேனா", "ஆம்" என்று இந்த கவர்ச்சியுள்ள சினிமா நடி சொல்லுகிறார். மேலும் அவர் சொல்லுவதாவது: லக்ஸ் டாய்லெட் சோப்பினால் என் சருமத்தின் அழகை பாதுகாக்கிறேன். இந்த சோப் சருமத்தை சுத்தமாகவும், வழவழப்பாகவும், மாசு மருவன்னியில் வைத்துக்கொள்வதில் சிறந்தது. அநேக ஸ்திரீகள் தங்கள் சருமத்தை அழகாகவும், இளமையாகவும், வைத்திருப்பது கடினம் என்று நினைக்கிறார்கள். ஆனால் இந்த நறுமணமுள்ள வெண்ணிற சோப்பினால் இது மிகவும் எளிது".

லக்ஸ் டாய்லெட் ஸோப்

LTS. 78-172 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி
பொருளடக்கம்

மலர் 2
இதழ் 24

1943 மார்ச் 20


சித்திரபானு ௵
பங்குனி மீ 7உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.



பரோபகாரத் தொண்டு ஒரு முறை செய்து அதன் இன்பத்தைக் கண்டவர்கள் பிறகு வேறெந்த இன்பத்தையும் நாட மாட்டார்கள். இதற்குச் சிறந்த உதாரணமாய் விளங்குகிறவர் ஸ்ரீமதி ஆண்டாள் வேங்கட சுப்பராவ். பெண் குலத்துக்கு — முக்கியமாக, ஆதரவற்ற அநாதைப் பெண்களுக்கு — சேவை செய்வதிலுள்ள இன்பத்தை இவர் பதினாறு வருஷத்துக்கு முன்னால் அறிந்தார். 1928-ம் வருஷத்தில் ஏழு மாணவிகளுடன் ஒரு சின்ன வாடகைக் கட்டிடத்தில் ஆரம்பமான சென்னை ஸேவாஸதனம் இன்று அழகிய சொந்தக் கட்டிடங்களில் முந்நூறு பெண்களுக்கு மேல் கல்வியும், கைத்தொழிலும், கலைப் பயிற்சியும் அளித்து வருகிறது. "ஸேவாஸதன"த்திலுள்ள பெண்களுக்கெல்லாம் பெற்ற தாயைக் காட்டிலும் சிறந்த தாயாக விளங்கி வரும் ஸ்ரீமதி வேங்கட சுப்பராவின் தளரா ஊக்கத்தினால் 'ஸேவாஸதனம்' நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வண்ணமிருக்கிறது. இத்தகைய சிறந்த ஸ்தாபனத்தின் இவ் வருஷத்துப் பரிசளிப்பு விழா நாளது 20உ அன்று நமது தலைவர் ராஜாஜியின் தலைமையில் நடைபெறுகிறது.

யுத்த முனையில் போராடிவரும் மேன்மை தங்கிய
மன்னர் பிரான் துருப்பு
களுக்கு சப்ளை செய்பவை





குவீன் ஆன்
உறுதியான லெவெல் லீவர் கடிகாரங்கள்
ரிஸ்டு அல்லது பாக்கெட் மாடல், நிக்கல் கேஸ் ரூ. 37.

நீடித்த உழைப்பிற்கும்
யான டயத்திற்கும் வெளி
யோகத்திற்கும் இரண்(
சிறந்தவை. சித்திரங்க
கிய கேட்லாக்கிற்கு எழுதவு



WEST END WATCH CO.
BOMBAY CALCUTTA

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

என்ன சேதி?

மீண்டும் விலை கூடுதல் ●

பத்திரிகாசிரியர்களில் பலவகை உண்டு. சிலர் பெயருக்கு மட்டும் பத்திரிகாசிரியர்கள்; பத்திரிகைகளின் தலைப்பிலோ முடிவிலோ அவர்களுடைய பெயர் அச்சிடப் படுவதுடன் சரி. தற்சமயம் இந்தியாவில் எல்லாப் பத்திரிகாசிரியர்களும் மேற்படி அந்தஸ்தைத்தான் அடைந்திருக்கிறார்கள். எல்லாப் பத்திரிகைகளுக்கும் இப்போது நிஜமான ஆசிரியர்கள் கவர்ன்மெண்ட் பிரஸ் அட்வைஸர்கள்தான். அவர்களுடைய அபிப்பிராயப்படியே பத்திரிகைகளில் விஷயங்கள் வெளியாகவேண்டியிருக்கிறது. இவ்விதம் பத்திரிகைகளின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதோடு அல்லாமல், பத்திரிகைகளின் நிர்வாகப் பொறுப்பையும் சர்க்காரே ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். இவ்வளவு பக்கந்தான் போடவேண்டும், இவ்வளவு விலைதான் வைக்க வேண்டும், விளம்பரத்துக்கு இந்த விகிதப்படிதான் பணம் வாங்க வேண்டும் என்றெல்லாம் சர்க்காரே சட்ட திட்டங்கள் செய்து வருகிறார்கள். இவ்விதம் கடைசியாக ஏற்பட்ட சர்க்கார் விதிகளின்படி "கல்கி"யின் விலை அடுத்த ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நாலணா ஆகிறது. வேண்டா வெறுப்புடனேயே நாம் இவ்விதம் விலையை உயர்த்தவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். பழைய விலையுடனும், நிறையப் பக்கங்களுடனும் மறுபடி "கல்கி"யை வெளியிடக் கூடிய நன்னாளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

புது வியாதி ●

தற்சமயம் இராஜ தந்திரிகளில் ரொம்பப் பேருக்கு ஒரு நூதனமான வியாதி வந்திருப்பதாகத் தெரிகிறது. டாக்டர்கள் அதற்கு என்ன பெயர் வைக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அவ் வியாதியின் சேஷ்டைகளின் முழு விபரமும் நமக்குக் கிடைக்காவிட்டாலும், ஒன்றிரண்டு அம்சங்கள் பளிச்சென்று புலப்படுகின்றன. அதாவது அவர்களுக்குத் தற்காலம் உலகத்தில் நடக்கும் விஷயங்களைப் பற்றியே ஞாபகமிருப்பதில்லை. எப்பொழுதும் நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு நடக்கப் போகும் காரியங்களைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள்!


ராஜதந்திரிகள் பலர் இப்பொழுது எதிர்கால உலகப் புனர் அமைப்பு, எதிர்காலப் பரிவர்த்தனை விகிதம், எதிர்கால ஆயுதப் பரிகரணம், எதிர்கால அரசியல் அந்தஸ்து என்றெல்லாம் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பதைத்தான் குறிப்பிடுகிறோம். ரூஸ்வெல்ட் துரை, சர்ச்சில், ஜெனரல் ஸ்மட்ஸ், சியாங்கே ஷேக், ஸம்னர்வெல்ஸ், அந்தோனி ஈடன் முதலிய எல்லாரும் இதைப்பற்றிப் பேசுகிறார்கள். ஏன்? நமது இந்திய சர்க்கார் கூட தனியாக ஒரு இலாகா ஏற்படுத்தி எதிர்காலத்தை நிர்மாணம் செய்ய ஆரம்பிக்கப் போகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!


இவர்கள் எல்லாம் இப்படி எதிர்காலத்தைப் பற்றி ஏற்பாடுகள் செய்து கொண்டே போனால் அப்புறம் கடவுளுக்கு என்ன வேலை இருக்கிறதோ தெரியவில்லை.

நல்ல காலம்! ●


கடைசியில் மிராசுதார்களுக்கும் குடியானவர்களுக்கும் நல்ல காலம் பிறந்து விட்டதென்றே தோன்றுகிறது. சென்ற பல வருஷகாலமாக அவர்கள் எத்தனையோ கூட்டங்கள் கூட்டினார்கள்; எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள்; எத்தனையோ தடவை அதிகாரிகளிடம் தூது கோஷ்டி அனுப்பினார்கள். இருந்தும் இன்னும் அவர்களுடைய குறைகள் தீர்க்கப்படாமலேயே இருந்து வருகிறது. ஆனால் இப்பொழுது எதிர்பாராத இடத்திலிருந்து உதவி கிடைத்திருக்கிறது. இந்தியாவில் வியாபாரம் பண்ணும் வெள்ளைக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களே இப்பொழுது நிஜாரைத் தூக்கிவிட்டுக் கொண்டு விவசாயிகளுக்

-உம்மன்



மகாத்மாவை விடுதலை செய்ய வேண்டுமென்று மேலும் தலைவர்கள் வற்புறுத்தினுல் வைஸராய் உண்ணுவிரதம் ஆரம்பிக்கும் அவசியம் நேரலாம் என்று கருதப்படுகிறது.
தேசாந்திரம் சென்றிருந்த ஸர் ராமஸ்வாமி முதலியார், ஸர் ராஜ்பாய், ஸர் ஸபருல்லா இம்மூவரும் மூட்டை முடிச்சுக்களுடன் இந்தியா திரும்பி
காங்கிரஸ் பெயரைச் சொன்னவுடன் காபரா அடையும் ஹோம் மெம்பர் மாக்ஸ் வெல்லைப் பார்த்து, சர்தார் சாந்தசிங் "மறு உலகத்திலும் காங்கிரஸ்பீதி உம்மைப் பிடிக்கட்டும்" என்று ஆசீர்வதித்தார்.
திருவனந்தபுரத்தில் புதிதாக ஸ்தாபிதமாகியிருக்கும் ரேடியோ நிலயத்தில் ஸர் சி.பி.ராமஸ்வாமி ஐயரின் முழக்கம் அவ்வப்போது கேட்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.



ருஷ்யா-சம்பந்தமாகச் சமீபத்தில் அதிகப் பிரசங்கம் செய்த அட்மிரல்ஸ்டாண்ட்லிக்குச் சரியான கிமிட்டல் கிடைத்து வருகிறது.



அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்டுள்ள பூசலைத் தீர்த்துவைக்க பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி ஈடன் முயற்சி செய்து வருகிறார்.



நேசக் கட்சி நாடுகளுக்கு அமெரிக்கா இதுவரையில் அளித்திருக்கும் உதவி பற்றிய ரிபோர்ட்டு வெளியாகியிருக்கிறது அதன்படி பிரிட்டன் அதிகமாகவும், சீன குறைவாகவும் உதவி பெற்றிருக்கின்றன.

க்காகப் பரிந்து பேச முன் வந்திருக்கிறார்கள்! இந்திய சட்டசபைக் கூட்டத்தில் ஐரோப்பியக் கட்சித் தலைவர் என்ன பேசினார் தெரியுமா? "தற்காலம் விவசாயிகளுக்கு ஏற்பட்டு வரும் லாபத்தினால் ஸ்திரமான பலன் ஏற்படும்படி என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாராம்.

கண்ணை உறுத்துகிறது! ●

ஒருநாளுமில்லாத திருநாளாக இந்த ஐரோப்பியர்கள் போயும், போயும் விவசாயிகள் விஷயத்தில் இப்பொழுது இவ்வளவு சிரத்தை காண்பிப்பானேன்? சோழியன் சிண்டு சும்மா ஆடாதல்லவா? அதுமாதிரி அவர்களுடைய இந்த சிரத்தைக்குக் காரணம் சுயநலமாகத்தானிருக்க வேண்டும். இப்பொழுது வரவு செலவுத் திட்டத்தில் இந்தியப் புனருத்தாரணத்துக்காகச் சில கோடி ரூபாய்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதை எங்கே இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்காக உபயோகப்படுத்தி பிரிட்டிஷ் கைத்தொழில்களுடன் போட்டி போடுவார்களோ என்ற பயம் ஏற்பட்டிருக்குமென்றே நினைக்கிறோம். ஆகையால் விவசாயிகளுக்காகப் பரிந்து பேசுவது போல் பேசினால் அந்த நிதியின் பெரும் பாகத்தை விவசாயத்துக்குச் செலவழிப்பதற்குக் கிளர்ச்சி செய்யலாமல்லவா?

விவசாய அபிவிருத்திக்குச் செலவழித்தால் அதுவும் நல்லதுதானே என்று நமக்குத் தோன்றும். ஆனால் எப்படிச் செலவழிக்கப் போகிறார்கள் தெரியுமா? ஒரு ஐரோப்பிய அங்கத்தினர் அதைப் பற்றிக் கூறினார் :—குழாய்கள், டிராக்டர்கள் முதலியவற்றை விவசாயிகளுக்கு ஏராளமாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று அவர் யோசனை சொன்னார். அதாவது, பணத்தையெல்லாம் வெளி நாடுகளிலிருந்து இந்த சாமான்கள் இறக்குமதி செய்ய உபயோகிக்கலாம் என்று மறைமுகமாகக் கூறுகிறார். நல்லவேளை அவர் விவசாயிகளுக்கு மோட்டார்கள் வரவழைத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லாமல் இத்தோடு நின்றாரே!

யதாஸ்தானம் போகிறது! ●

சென்ற வருஷம் கிட்டத் தட்ட இதே சமயத்தில் சென்னை மாகாணத்தில் நேரிட்ட பிரசித்தி பெற்ற ஜப்பான் படையெடுப்பு நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்! அப்பொழுது ஜப்பானியப் படையெடுப்பு உண்மையில் நடக்கவில்லை. அதற்குப் பதிலாக சென்னை சர்க்கார் காரியாலயங்களின் படையெடுப்பு நாலா பக்கங்களிலும் மிகத் தீவிரமாக நடந்தேறியது. அப்பொழுது ஸெக்ரிடேரியட் காரியாலயம் கோட்டையை விட்டுச் சேத்துப்பட்டில் பச்சையப்பன் கல்லூரிக்கு வந்து சேர்ந்தது. அப்படி வந்ததில் மாணவர்களால் சர்க்கார் காரியாலயத்தினருக்கும், காரியாலயத்தால் மாணவர்களுக்கும் தொல்லையும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இப்போது ஸெக்ரிடேரியட் காரியாலயம் தனது யதாஸ்தானத்துக்கே கடல் காற்று வாங்குவதற்காகப் போவதைக் கேட்டு மாணவர்கள் பெருமூச்சு விடுவார்களென்று நினைக்கிறோம்.

சர்க்கார் காரியாலயம் இப்படித் தனது பழைய இடத்துக்குப் போவதிலிருந்து நாம் ஒரு விஷயம் ஊகிக்க முடிகிறது. ஜெனரல் வேவல் என்ன சொன்னாலும் சரி, சென்னை மாகாணத்துக்குத் தற்போதைக்கு யுத்த பயமில்லை என்ற முடிவுக்கு வருகிறோம். அதுவும் மேன்மை தங்கிய ஸர் ஆர்தர் ஹோப் சர்க்காரின் காரியாலயமே அப்படிப் போகிறது என்று நினைக்கும்போது இந்த முடிவு சந்தேகத்துக் கிடமில்லாமல் ஊர்ஜிதமாகிறது.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர் "பிரமசாதமில்லை" என்பதை எழுதிய எஸ். சுந்தரராஜன், மானாமதுரை.

இரண்டு அபாயங்கள்

கொடையாளிகளில் இரண்டு விதங்கள் உண்டு. வலது கையால் கொடுப்பது இடது கைக்குத் தெரியாமல் கொடுப்பவர்கள் சிலர். டமாரம் அடித்து ஊரை யெல்லாம் கூட்டி, ''இதோ பாருங்கள்! நான் கொடுக்கப் போகிறேன். நானாகக் கொண்டு கொடுக்கிறேன். வேறு யாரும் இப்படிக் கொடுக்க மாட்டார்கள். கொடுக்கத்தான் கொடுக்கிறேனே! வாங்கிக் கொள்ளும் இந்த மனுஷனுக்கு நன்றியிருக்கப் போகிறதா? உடனே மறந்து விடப் போகிறான். உலகமே நன்றி கெட்ட உலகந்தான். ஆனாலும் நான் கொடுத்துத் தொலைக்கிறேன். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றெல்லாம் சொல்லிக்கொண்டு கொடுப்பவர்கள் சிலர்.

முதல் விதக் கொடைகளைச் சாதாரணமாக ஏழைகளிடத்திலே பார்க்கலாம். வாங்கிக் கொள்கிறவன் நன்றி கூற வந்தால், ''அதைப் பற்றிப் பேசாதீர்கள்! என்ன பிரமாதமாகக் கொடுத்து விட்டேன்?'' என்று இவர்கள் மடக்கி நிறுத்துவார்கள். இரண்டாவது வகைக் கொடையாளிகளுக்குச் சாதாரணமாக ஒரு தடவை நன்றி கூறினால் போதாது; ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். ''நீங்கள்தான் கொடுத்தீர்கள். உங்களைத் தவிர வேறு யாரும் இவ்வளவு தாராளமாகக் கொடுக்க மாட்டார்கள். யார் கொடுத்தாலும் நீங்கள் கொடுப்பது போலாகாது'' என்றெல்லாம் சொல்ல வேண்டும். அப்போதும் அவர்கள், ''ஆமாம்; ஐயா! இன்றைக்குச் சொல்கிறீர்கள்; நாளைக்கு மறந்து போய் விடுவீர்கள்'' என்று அதிருப்திப் படுவார்கள்.

இந்த இரண்டாவது வகைக் கொடையாளிகளில் அமெரிக்காவைச் சேர்க்க வேண்டுமென்று தோன்றுகிறது. ருஷியாவிலுள்ள அமெரிக்க ஸ்தானாதிபதி சமீபத்தில் ஒரு பெரிய போடு போட்டார். ''ருஷியாவுக்கு நாங்கள் எவ்வளவோ ஒத்தாசை செய்து வருகிறோம். டாங்கி, விமானம் எல்லாம் அனுப்பி வருகிறோம். ரொக்கப் பணம் கேட்காமல் கடனாக அனுப்பி வருகிறோம். ருஷிய சர்க்கார் இதை யெல்லாம் சொல்லுகிறதே யில்லை. ருஷியப் பத்திரிகைகளில் போடுவதே யில்லை'' என்று புகார் செய்தார்.

இவருடைய கூற்று உலகமெங்கும் பரபரப்பை உண்டு பண்ணிற்று. ருஷிய சர்க்காரின் போக்கைப் பற்றியும், அவர்களுடைய அந்தரங்கக் கருத்தைப் பற்றியும் பலவித சந்தேகங்களை உண்டாக்கின.

மேற்படி ஸ்தானாதிபதி அவ்விதம் பேசியது தவறென்று அமெரிக்காவிலுள்ள பெரிய சர்க்கார் நிர்வாகிகள் சொன்னார்கள். பத்திரிகைகளும் அவரைக் கண்டித்தன. ஆனால், அமெரிக்காவில் அவரை ஆதரிப்பதற்கும் ஒரு கட்சி இருப்பதாகத் தெரிகிறது. இவர்கள்தான் ருஷியா என்ன செய்யுமோ என்ற சந்தேகத்தையும் கிளப்பி விடுகிறார்கள். ''எங்கள் தேசமே எங்களுக்குப் போதும். வேறு தேசங்களில் நாங்கள் ஆக்கிரமிக்க மாட்டோம்'' என்று ருஷிய சர்க்கார் நியாயமாகச் சொல்வது கூட இவர்களுடைய சந்தேகத்தையே வளர்க்கிறது. ''ஜெர்மன் படைகளை ருஷிய எல்லைக்கு விரட்டியதும் ருஷ்யா சண்டையை நிறுத்திவிடுமோ, என்னமோ?'' ''ஜெர்மனியுடன் ருஷியா தனிச் சமாதானம் செய்து கொள்ளுமோ, என்னமோ?'' என்று இவ்விதமெல்லாம் அமெரிக்காவில் சிலர் சந்தேகத்தை கிளப்பிக் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க ஸ்தானாதிபதியின் புகாரில் ஏதேனும் நியாயம் இருக்கிறதா? கொஞ்சம் கூடக் கிடையாது என்றே நாம் கருதுகிறோம்.

ருஷியாவுக்கு அமெரிக்கா செய்திருக்கும் உதவி அவ்வளவு பிரமாதமானதா? அதற்காக ருஷியா நன்றி செலுத்த வேண்டுமா? நன்றி செலுத்தாதது பிசகா? ருஷிய சர்க்கார் மேற்படி உதவிகளைப் பிரமாதமாக ருஷிய ஜனங்களுக்குச் சொல்லாதது பிசகா? — கிடையவே கிடையாது என்று நாம் கருதுகிறோம்.

உண்மையில், ருஷியாவுக்குத்தான் அமெரிக்காவும் பிரிட்டனும் — மனித வர்க்கமுமே — நன்றி செலுத்த வேண்டும். ருஷியா பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் செய்துவரும் உதவியைப் பார்க்கும்போது, அமெரிக்காவின் உதவி ஒரு கொசுவுக்குச் சமான

மாகும். அதைப் பிரமாதப்படுத்திச் சொல்வது வெட்கக்கேடு. ருஷியா மேல் குறைப்படுவது மிகக் கேவலம்.

ருஷியா நடத்திவரும் பிரம்மாண்டமான போராட்டத்தையும், ருஷியர்கள் அடைந்துவரும் மகத்தான கஷ்ட நஷ்டங்களையும் நினைத்துப் பார்க்கும்போது தலைசுழல்கிறது; கதி கலங்குகிறது. இந்த மாதிரி ஒரு வீரப் போர் உலக சரித்திரத்திலேயே நடந்தது கிடையாது. இம்மாதிரி ஒரு தேச மக்கள் உறுதி குலையாம லிருந்ததைக் கதைகளில் கூடக் கேட்டது கிடையாது.

ஜெர்மனி ருஷியாவின் மீது திடீரென்று படையெடுத்தபோது, ஜார்ஜ் பெர்னார்ட் ஷா என்னும் பிரசித்தி பெற்ற பிரிட்டிஷ் ஆசிரியர் பளிச் சென்று ஒரு வார்த்தை சொன்னார். ‘‘இனிமேல் பிரிட்டன் தூங்கப் போகலாம்! யுத்தத்தை ருஷியாவே ஜயித்துவிடும்!’’ என்றார். இதன் கருத்து உண்மையாகவே பிரிட்டன் தூங்கப் போகலாம் என்பதல்ல. (ஜெர்மன் பாம்பர்கள் தூங்குவதற்கு விடா அல்லவா?) ருஷியாவின் வீரத்தில் தமக்குள்ள பூரண நம்பிக்கையையே ஆசிரியர் பெர்னார்ட் ஷா அவ்விதம் வெளியிட்டார்.

அப்போது அவர் கூற்றைப் பெரும்பாலோர் நம்பவில்லை. நாஜிப் படைகள் ருஷியாவுக்குள் அதிவேகமாக முன்னேறியபோது, ருஷியாவுக்கு ஆறு மாதம் — ஒரு வருஷம் — என்று பலர் கெடு வைத்தார்கள். அதெல்லாம் பொய்யாயிற்று. பெர்னார்ட் ஷாவின் நம்பிக்கையே மெய்யாயிற்று. லெனின்கிராட்டையும், மாஸ்கோவையும் ஜெர்மானியர் கஜகர்ணம் போட்டும் பிடிக்க முடியவில்லை.

சென்ற மூன்று மாதமாக ருஷியாவில் நடந்துவரும் அதிசயங்கள் உலகத்தையே திகைக்க வைத்திருக்கின்றன. ஜெர்மானியர் ஸ்டாலின்கிராட் நகரை முற்றுகையிட்டனர். ஸ்டாலின்கிராட் அவர்களை முற்றுகையிட்டுப் பிடித்துக் கொண்டது. ஒன்றரை லட்சம் ஜெர்மானியர் பொறியில் எலியைப்போல் ஸ்டாலின் கிராட்டில் அகப்பட்டுக் கொண்டனர்.

பிறகு ஜெர்மனியின் பின்னேற்றமும் ருஷியாவின் முன்னேற்றமும் ஒழுங்காக நடந்து வந்திருக்கின்றன.

இந்த மகத்தான வெற்றிகள் எல்லாம் ருஷியாவுக்குச் சுலபமாகக் கிடைத்து விட்டதா? எத்தனை லட்சக் கணக்கான உயிர்கள் பலியாயின? எவ்வளவு பொருள் சேதம்? தொழிற்சாலைகளில் எவ்வளவு இரவு பகல் உழைப்பு?

ஜெர்மானியர் காலி செய்து விட்டுப் போகும் ருஷியப் பிரதேசங்களைப் பற்றிப் படிக்கும்போது நெஞ்சு பிளந்து போகும் போலிருக்கிறது. நகரங்களிலும், கிராமங்களிலும் ஒரு சின்னஞ் வீடு கூடப் பாக்கி கிடையாது. எல்லாம் தரை மட்டமாயின.

ஆயிரக்கணக்கான மைல் விஸ்தீரணமுள்ள செழிப்பான பிரதேசங்கள் — கிளி கொஞ்சிய வயல்கள் — எல்லாம் ஒரே பொட்டல் காடாகியிருக்கின்றன.

பாலங்கள், நீர்ப் பாசனங்கள், அணைக்கட்டுகள் எல்லாம் நாசமாக்கப்பட்டன.

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது அமெரிக்காவின் உதவியை ஒரு உதவி என்று சொல்ல முடியுமா? ருஷியர்கள் அதைப் பிரமாதப் படுத்தாததில் என்ன வியப்பு இருக்கிறது? ‘‘ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனை ஏற்படுத்தவில்லை’’ என்று அவர்கள் புகார் கூறுவதில்தான் என்ன பிசகு இருக்கிறது?

மேலும், எத்தனை நாளைக்கு அவர்கள் இதே மாதிரி தனியாக ஜெர்மன் ராட்சஸ பலத்தைச் சமாளிக்க முடியும்? — கடைசியாக வந்த செய்தி, ஜெர்மானியர் மறுபடியும் கார்கோவ் நகரைக் கைப்பற்றியதாகவும், அங்கே ருஷியர்கள் மறுபடியும் பின் வாங்குவதாகவும் சொல்கிறது.

குளிர் காலம் போய் மறுபடியும் வஸந்த காலம் வந்ததும், இன்னொரு முறையும் ஒருவேளை ஜெர்மன் முன்னேற்றம் தீவிரமாக ஆரம்பிக்கலாம். அப்படி ஆரம்பித்தால் ருஷியாவினால் தாங்க முடியுமா?

‘‘ஜெர்மனியுடன் ருஷியா தனி சமாதானம் செய்து கொள்ளுமா?’’ என்று சந்தேகத்துக்கு ஆதாரம் ஏதேனும் உண்டா என்பது நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று நிச்சயமாய்ச் சொல்லலாம். அந்த மாதிரி மட்டும் நேர்ந்து விட்டால், அது உலகத்துக்கே ஒரு பெரிய அபாயமாகும். அம்மாதிரி நேரிடாமல் தடுப்பது மிகவும் அவசியம். பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் ரொம்பவும் அவசியமாகும்.

ருஷியா மனச் சோர்வு அடைவதற்கு இடங் கொடுக்கக் கூடாது; தளர்ச்சி

யடைவதற்கு விடக் கூடாது. ஜெர்மனியின் முழு பலத்தையும் ருஷியாவே நெடுகிலும் தாங்கி வரும்படி விடக் கூடாது. இதெல்லாம் நேராம லிருப்பதற்கு ஐரோப்பாவில் உடனே இரண்டாவது போர்முனை ஆரம்பித்தாக வேண்டும். அதனால் நேரக் கூடிய கஷ்ட நஷ்டங்களை யெல்லாம் பிரிட்டனும் அமெரிக்காவும் சகித்துக் கொண்டே யாக வேண்டும். ருஷியா தன்னந் தனியாக ஒன்றரை வருஷத்துக்கு மேல் போராடிய பிறகு, இன்னமும், பிரிட்டிஷ் - அமெரிக்கர் இரண்டாவது போர்முனைக்குத் ''தயாராக வில்லை'' என்று சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இப்படிக் காலந் தாழ்த்துவது பெரும் அபாயத்தில் முடியக் கூடும்.

இந்த யுத்தம் சம்பந்தமாக நேரக் கூடிய இன்னொரு பெரிய அபாயம் இருக்கிறது. சீனாவுக்குத் தக்க உதவி உடனே செய்யாமல் காலந் தாழ்த்துவதினால் அந்த அபாயம் நேரலாம்.

ஜப்பானியரைப் பெரும்பாலான சீன மக்கள் துவேஷிக்கிறார்கள் என்பது உண்மை. அஞ்சா நெஞ்சுடனும் அளவிலாத தீரத்துடனும் சீனர்கள் வருஷக் கணக்காகப் போரிட்டு வருவதும் உண்மை. ஆனால் மனித வீரத்துக்கும் சகிப்புத் தன்மைக்கும் ஓர் எல்லையுண்டு. சீனர்கள் அந்த எல்லைக்கு வந்து சேர்வதற்கு முன்னால் அவர்களுக்குத் தகுந்த உதவி அனுப்பியாக வேண்டும். சீனத் தலைவர்கள் இடைவிடாமல் ''உதவி! உதவி!'' என்று ஓலமிட்ட வண்ண மிருக்கிறார்கள்.

ஜப்பானியர் யுத்த தந்திரத்தில் கை தேர்ந்தவர்களா யிருப்பது போல் அரசியல் தந்திரத்திலும் தேர்ந்தவர்கள். சீனாவுக்கு எந்தப் பக்கத்திலும் உதவி வர முடியாமல் தடுத்துவிட்டு, சீனாவைச் சரிப்படுத்தப் பார்த்தார்களானால் அதில் வியப்பு ஒன்றுமிராது.

சென்ற வாரத்தில் ஜெனரல் டோஜோ சீனாவுக்குப் போயிருந்தாரென்றும், போலி சீனத் தலைவர் ஒருவருடன் பேசினாரென்றும் தெரிகிறது. அதோடு, சீனாவில் ஜப்பானுக்கு இருந்த அதிகப்படி உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடப் போகிறாராம். இதெல்லாம் சீனாவைச் சரிக் கட்டுவதற்கு ஒரு பெரிய சூழ்ச்சி என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சூழ்ச்சி பலிக்காமல் செய்வது மிகவும் அவசியமாகும்.

சீனாவுக்கு வேண்டிய உதவி அனுப்புவதற்குத் தற்சமயம் பெரிய தடையா யிருப்பது பர்மா ஜப்பானுடைய வசப்பட்டிருப்பதாகும். பர்மாவின் வழியாகத்தான் சீனாவுக்கு உதவி அனுப்பக் கூடும். ஆகையால், பர்மாவைச் சீக்கிரம் ஜப்பானிட மிருந்து கைப்பற்ற வேண்டும்.

அப்படி பர்மாவைச் சீக்கிரம் கைப்பற்றுவதற்குத் தடையா யிருப்பது இந்தியாவில் அரசியல் பிரச்னை தீராமலிருப்பதுதான். இந்திய மக்களின் அன்பையும் நம்பிக்கையையும் பெற்ற தலைவர்கள் சிறையில் இருந்து வருவதுதான்.

இப்போதுள்ள இந்தியா கவர்ன்மெண்டுக்கு வேறு பல யோக்யதைகள் இருக்கலாம். ஆனால் இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற்ற கவர்ன்மெண்ட் இது என்று ஒருநாளும் சொல்ல முடியாது.

பொதுஜனத் தலைவர்களைக் கொண்ட தேசிய சர்க்காரை உடனே ஏற்படுத்தியாக வேண்டும். பொதுஜனங்களின் பூரண ஆதரவுடனும் பக்க பலத்துடனும் பர்மா படை யெடுப்பை ஆரம்பித்து ஜப்பானியரை அங்கிருந்து அகற்ற வேண்டும். அப்போது சீனாவுக்குத் தகுந்த உதவி யளிக்கலாம். சீனாவில் யுத்த தளங்களை ஏற்படுத்திக் கொண்டு, ஜப்பானை ஜப்பானிலேயே தாக்கி முறி யடிக்கலாம்.

ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஏற்படுத்துவது எவ்வளவு முக்கியமோ, எவ்வளவு அவசியமோ, அவ்வளவு இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதும் அவசியமாகும்.

இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்கு பிரிட்டிஷ் சர்க்காரையே இனியும் நம்பி யிருப்பதில் பிரயோஜனமில்லை யென்று ராஜாஜி எடுத்துக் காட்டுகிறார். இத்தனை காலமும் அவர்கள் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை யாதலால், அதற்கு அவர்கள் லாயக்கே இல்லை என்று ஏற்பட்டு விட்டது.

ஆகவே, யுத்தத்தில் ஜயிப்பதில் அக்கறை கொண்ட மற்ற நேசக் கட்சி தேசங்கள் தலையிட்டே தீரவேண்டும். முக்கியமாக, அமெரிக்காவும் சீனாவுந்தான் இதில் சிரத்தை எடுக்கவேண்டும்.

அவ்விதம் அவர்கள் சிரத்தை எடுத்தால், யுத்தத்தைச் சீக்கிரம் வெற்றிகரமாக முடிப்பதற்கு உதவி செய்தவர்களாவார்கள். இல்லாத வரையில் எதிர்பாராத அபாயங்கள் ஏற்படுவதற்கும், யுத்தம் நீடித்துக் கொண்டே போவதற்குந்தான் ஏதுவாகும்.

அக்கப் போர்

"காசி"

"உணவுப் பொருள் நெருக்கடியை உத்தேசித்து வங்க மந்திரி சபையில் இன்னும் மூன்று பேரை மந்திரிகளாக நியமிக்கப் போகிறார்கள்" என்று ஒரு செய்தி கூறுகிறது.

மூன்று பேரைப் பற்றிய கவலை தீர்ந்தது. வங்காளத்திலுள்ள பாக்கிப் பேருக்கு வழி என்ன?

*　　*　　*

கல்கத்தா சர்வகலாசாலையில் சென்ற வாரம் பரீட்சை நடந்துகொண்டிருந்தது. அப்போது சில மாணவர்கள் பரீட்சை ஹாலில் காவலாயிருந்த சிப்பாய்கள் கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு உள்ளே போய் விடை எழுதிக்கொண்டிருந்த மாணவர்களிடமிருந்து கேள்வித் தாள்களைப் பிடுங்கிக் கொண்டு வந்துவிட்டார்களாம்.

இதன் பயனாய்ச் சமையலுக்கு உபயோகிக்கும் 'மிளகாய்ப் பொடி'யை சர்க்கார் யுத்த ஆயுதமாகக் கருதி, இந்தியத் தற்காப்புச் சட்டப்படி லைசென்ஸ் வைத்துக் கொள்ளச் சொல்வார்களோ என்று சில பெண்மணிகள் பயப்படுகிறார்கள்.

*　　*　　*

"மாக்ஸ்வெல் துரைக்கு சதா சர்வதா காங்கிரஸ்காரர்களைப் பற்றிய கிலிதான். மறு உலகில் கூட அவரை அந்தக் கிலி விடாது போலிருக்கிறது" என்று சர்தார் சாந்த சிங் இந்திய சட்டசபையில் கூறினார்.

ஆனால் அந்தத் துரை காங்கிரஸ் தேசாபிமானிகள் இருக்கும் வீர சுவர்க்கத்தின் பக்கம் போகச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது சந்தேகத்துக்கிடமான விஷயம்.

*　　*　　*

ஜப்பானியர்கள் சென்ற வாரம் நாத்தடங் என்ற இடத்துக்கு வடகிழக்கே 20 மைல் தூரம் இந்தியாவின் பக்கம் முன்னேறினார்களாம்.

"தற்போதைக்குப் பர்மா எல்லையில் சண்டை போடுவதற்கில்லை. ஏனென்றால், கொசு, மலேரியா, மழை எல்லாம் பெருத்த கஷ்டத்தை விளைவிக்கும்" என்று ஜெனரல் வேவல் எச்சரித்திருப்பதையும் லக்ஷ்யம் செய்யாது ஜப்பானியர்கள் சண்டை போடுவதைப் பார்க்கும்போது அவர்கள் "தற்கொலை செய்து கொள்ளும் சுபாவமுள்ளவர்கள்" என்ற விஷயம் ஊர்ஜிதமாகிறது.

"பர்மாவைத் திரும்பக் கைப்பற்றும் முயற்சியை ஜெனரல் வேவல் ஏன் அடுத்த வருஷத்துக்கு ஒத்திப் போட்டுவிட்டார்?" என்று ஒரு சந்தேகப் பிராணி கேட்கிறார்.

இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம். முதலாவது: "ஜப்பானியப் பிரதம மந்திரி டோஜோ, 'இந்த வருஷம் யுத்தம் கட்டாயம் முடிந்தாக வேண்டும்' என்று சொன்னாரல்லவா? அவர் எதிர்பார்க்கிறபடி நாம் நடந்து விடுவதா?" என்று இருக்கலாம். இரண்டாவது தான் முக்கிய காரணமாக இருக்க வேண்டும். பர்மாவில் இப்பொழுதே படையெடுத்து எதிரிகளைத் துரத்த ஆரம்பித்தால் அவர்கள் மெதுவாகப் பின்வாங்கிச் செல்லக் கூடும். ஆனால் ஒரு வருஷங் கழித்துச் சாவகாசமாகத் திடீரென்று எதிர்த்தால் அவர்கள் அதற்குள் ரோமலின் படைகள் மாதிரி ஒரே ஓட்டமாய் ஓடுவதற்குப் பயிற்சி செய்து கொள்ளக் கூடுமல்லவா?

"இந்தியாவில் சிறந்த கற்பனா சக்தியுள்ள ஆசிரியர்கள் யாரும் இல்லை" என்று ஒரு விமர்சகர் கூறுகிறார்.

ஸர் டாட்டன்ஹாம் துரை கடைசியாக வெளியிட்ட "காங்கிரஸின் பொறுப்பு ..." என்ற எண்பத்திரண்டு பக்கமுள்ள மகத்தான நூலை இவர் படிக்கவில்லை போலும்.

* * *

மாரெத் அரண் பக்கத்தில் ஒரு குன்றைப் பிடிப்பதில் பல சமையற்காரர்கள் ஈடுபட்டிருந்தார்களென்று ராய்ட்டரின் ராணுவ நிபுணர் தெரிவிக்கிறார்.

இவர்கள் துப்பாக்கியுடன் போனார்களா, அல்லது கரண்டிகளுடனேயே போய் யுத்தஞ் செய்தார்களா என்று நிச்சயமாய்த் தெரியவில்லை.

* * *

கராச்சி முனிஸிபல் அங்கத்தினர்களில் ஏழு பேர் பாதுகாப்புச் சட்டப்படி சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடைய ஸ்தானங்களுக்குத் தேர்தலில் நிற்க ஒரு காவிதார், ஒரு மோட்டார் டிரைவர், ஒரு மாஜி முனிஸிபல் சேவகர் முதலியவர்கள் மனுச் செய்து கொண்டிருக்கிறார்களாம்.

பாவம், வைஸராய் நிர்வாக சபையில் மூன்று அங்கத்தினர்கள் பதவி இன்னும் காலியாயிருப்பது மேற்படியார்களுக்குத் தெரியாது போலிருக்கிறது!

* * *

ஒருவேளை அந்தப் பதவிக்குள்ள யோக்யதை தங்களுக்கு இருக்கிறதோ இல்லையோ என்று அவர்கள் சந்தேகப்படலாம். அப்படிப்பட்ட சந்தேகமே இவர்களுக்கு ஏற்பட வேண்டியதில்லை. ஏனென்றால் சர்வ கலா சாலைப் பட்டங்களோ, மற்ற யோக்யதாம்சங்களோ தேவையாயில்லாத ஓர் உத்தியோகம் உண்டென்றால் அது வைஸராய் நிர்வாக சபை அங்கத்தினர் பதவிதான்.

மேற்படி மூன்று பேர்களும் நிர்வாக அங்கத்தினர் பதவி கிடைக்க வேண்டுமென்றால் பின் வருமாறு மனுச் செய்து கொள்ளட்டும் :

"மேன்மை தங்கிய வைஸராயின் திவ்ய சமூகத்துக்கு,

தங்கள் நிர்வாக சபையில் மூன்று அங்கத்தினர்கள் பதவி காலியாயிருக்கிறதென்று கேள்விப்பட்டு அவற்றில் ஒன்றுக்கு நான் இந்த மனுவைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். என்னுடைய யோக்யதாம்சங்கள் என்னவென்றால் :—

நான் எப்பொழுதும் காங்கிரஸைத் தூற்றி வந்திருக்கிறேன். இந்தியாவுக்கு ஜனநாயகம் கொஞ்சங்கூட ஏற்றதில்லையென்று நான் எப்பொழுதுமே சொல்லி வந்திருக்கிறேன். என்னைப் பாதிக்காத வரையில் தற்கால நிலைமையில் எந்தவித மாறுதல் ஏற்படுவதையும் நான் விரும்பவில்லை.

நான் நான்காம் வகுப்புப் பரீக்ஷையில் தவறிவிட்ட போதிலும் எனக்கு ஆங்கிலத்தில் பரிச்சயமுண்டு. பல துரைமார்களுக்கு ஊழியம் செய்ததில் எனக்கு இங்கிலீஷ் பேசத் தெரியும்.

நான் யுத்த நிதிக்காக வைத்த குலுக்கல் பந்தயத்துக்கு டிக்கெட் வாங்கியிருக்கிறேன்.

வைஸராய் என்னை மட்டும் நிர்வாக சபை அங்கத்தினராக நியமித்தாரானால் நான் என் சம்பளத்தில் ஒரு பகுதியை அவர் குறிப்பிடும் எந்தக் காரியத்துக்கு வேண்டுமானாலும் கொடுக்கத் தயார்.

துரைமார் அளித்த நற்சாட்சிப் பத்திரங்களின் நகல்களை அனுப்பியிருக்கிறேன். எந்த விஷய சம்பந்தமாகவும் என்னுடைய எஜமானாகிய தங்களுக்கும் எனக்கும் அபிப்பிராய பேதமே ஏற்படாதென்றும், ராஜீநாமா செய்வதைப் பற்றிக் கனவிலும் கருத மாட்டேனென்றும் சத்தியம் செய்கிறேன்."

இப்படிக்கு,

....

கேட்டுப் பாருங்கள் !

சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தபடி 12ஆ மாலை 7-30 க்குத் திருவனந்தபுரம் நிலையத்தைத் திருப்பினேன். திருப்புகழ் மணியின் குரல் கணீர் என்று கேட்டது. வாயு பகவானின் ஆர்ப்பாட்டங்கூட ரொம்பக் குறைவாகவே இருந்தது. (அவரும் தமிழிசை இன்பத்தில் மயங்கி இருந்தார் போலும்!) அரைமணி நேரத்துக்குத் திருப்புகழ் மணியின் குரல் வழியாக அருணகிரிநாதர், ஆழ்



வார்கள், நாயன்மார்கள் முதலிய தமிழ்ப் பெரியார்கள் நம்முடைய உள்ளத்தோடு கலந்து உறவாடினார்கள்.

திருப்புகழ் மணி ஆரம்பித்து வைக்கும் காரியம் எதுவும் நன்கு சிறக்கும் என்ற நமது நம்பிக்கை உடனே ருசுவாயிற்று. அடுத்தாற் போல் செம்மங்குடி சீனிவாசய்யரின் கச்சேரி, மாணிக்கம் — மணி பக்க வாத்தியங்களுடன் திவ்யமாக நடைபெற்றது. செம்மங்குடி புது முறையில் கச்சேரி ஆரம்பித்தார். ஸாவேரி ராகத்தை மிகவும் விச்ராந்தியாக ஆலாபனம் செய்து 'தானம்' பாடி ஸ்வாதித் திருநாள் கீர்த்தனம் ஒன்றை ஆரம்பித்தார். விம்மேர் திரமத்தியம ராக ஆலாபனம் பழைய செம்மங்குடியின் பிரமாதமான கச்சேரியை நினைவூட்டியது. உருப்படிகளில் ஆங்காங்கே சிஷ்யரின் கீச்சென்ற தனிக் குரல் கேட்டது. செம்மங்குடி கீழ் ஸ்தாயியிலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார் — மேலே போக அவருடைய குரல் இடங் கொடுக்கவில்லை — என்பதை மேற்படி சிஷ்யரின் தனிக்குரல் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது.

செம்மங்குடி சீனிவாசய்யர் திருவாங்கூரிலேயே ஐக்யமாகி விட்டாரே என்ற குறை நமக்கு ரொம்பவும் இருந்தது. திருவாங்கூர் ரேடியோ மூலமாகவாவது அவருடைய உயர்ந்த சங்கீதத்தை அடிக்கடி கேட்க முடியுமானால் ஒருவாறு திருப்தி யடையலாம்.

• • •

தமிழ்நாட்டு மகா கவியான கம்பரின் விழா மார்ச்சு 20ஆ வருகிறது. அன்று திருச்சி ரேடியோவில் தேரழுந்தூர் டி. வி. சீனிவாஸாச்சாரியார் கம்பராமாயணப் பாடல்களை மத்தியானம் 1 மணிக்கும் மாலை 6 மணிக்கும் பாடுகிறார். கம்பன் பாடல்களுக்குக் கீர்த்தன ரூபமாக மெட்டு அமைத்துப் பாடுகிறார். ஸாஹித்யச் சிறப்பைப்போல் சங்கீதமும் பிரகாசிக்குமென்று எதிர்பார்க்கிறேன்.

21ஆ சென்னையில் ராதா ஜயராமன், கே. சங்கரி அம்மாள் இவர்கள் பாட்டும், திருச்சியில் கே. பி. சிவானந்தம் வீணையும் கேட்டுப் பார்க்கத் தக்கவை.

22ஆ திருச்சியில் மன்னார்குடி ராஜகோபாலப் பிள்ளையின் கச்சேரி.

23ஆ சென்னையில் சரஸ்வதி பலராமன் பாட்டும், திருச்சியில் மதுரை காமு அம்மாள் வீணையும் கேட்டுப் பார்க்கலாம். சென்னையில் 8 மணிக்கு ஸ்ரீ வெங்கடகிரியப்பா வீணை.

24ஆ திருச்சியில் ஆலத்தூர் சகோதரர்கள் முக்கால் மணி நேரம் வாசெனுளி வாத்ய கோஷ்டியுடன் பாடுகிறார்கள். வி. எஸ். கிருஷ்ணன் பாட்டும் இருக்கிறது.

25ஆ சென்னையில் ஆர். ராஜகோபாலன் பாடுகிறார். திருச்சியில் செந்தூர் சுப்பிரமணியப் பிள்ளையின் பெரிய பக்க வாத்தியக் கச்சேரி.

26ஆ திருச்சியில் ஸ்ரீ கே. சதாசிவம் பிள்ளை பாட்டும், எஸ். ஆர். கோவிந்தசாமிப் பிள்ளை சகோதரர்கள் நாதஸ்வரக் கச்சேரியும் நடக்கின்றன.


27ஆ சென்னையில் ஸ்ரீ வி. வி. சடகோபன் முழு நேரக் கச்சேரி செய்கிறார்.

28ஆ சென்னையில் லீலா - சரோஜனி பாட்டு; திருச்சியில் பல்லடம் சஞ்சீவி ராவரின் வேணுகானம்.

29ஆ திருச்சியில் கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையின் வயலின் கச்சேரி.

30ஆ திருச்சியில் ஸ்ரீ துரையப்ப பாகவதரின் கோட் வாத்தியம் கேட்கலாம்.

31ஆ சென்னையில் பாலையூர் வெங்கட்ராமன் பாடுகிறார். திருச்சியில் ஸ்ரீ டி. கே. ஜயராமய்யர் தயாரித்த "சகுந்தலா" இசை நாடகம் நடக்கிறது.



இளம் பாடகர் ஆர். ராஜகோபாலன்

தூக்கு தண்டனை

"கல்கி"

1

அமாவாசை இரவு. திவான்பகதூர் ஜட்ஜ் அஷ்டோத்தர மய்யங்கார் சுகமான பஞ்சு மெத்தைப் படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தார். என்ன புரண்டாலும் தூக்கம் வருகிற வழியாயில்லை. தலைப்பக்கத்துத் தலைகாணியைக் கால் புறத்திலும், கால் புறத்துத் தலைகாணியைத் தலைப்புறத்திலும் வைத்துக்கொண்டு பார்த்தார். அப்படியும் தூக்கம் வரவில்லை.

கடிகாரத்தில் மணி அடிக்கத் தொடங்கிற்று. "ஒன்று, இரண்டு, மூன்று ..." என்று எண்ணிக்கொண்டே வந்தார். பன்னிரண்டு மணி அடித்து ஓய்ந்தது. "இனிமேல் கட்டாயம் தூங்க வேண்டியதுதான்" என்று ஜட்ஜ் அய்யங்கார் திடசங்கல்பம் செய்து கொண்டு கண்களை இறுக மூடினார். அப்போது அவருடைய மனக் கண்ணின் முன்பாக ஒரு பயங்கர கோரக் காட்சி தென்பட்டது.

முதலில், எங்கேயோ வெகு தூரத்தில் உள்ளதுபோல் அந்தக் காட்சி மங்கலாய்த் தெரிந்தது. தூக்கு மேடையில் தூக்கு மரத்தில் ஓர் உருவம் தொங்கி இலேசாகக் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. சட்டென்று அந்தக் காட்சி — தூக்கு மரம், அதில் தொங்கிய உருவம் எல்லாம் — வெகு சமீபத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. பால் வடியும் அழகிய வாலிபனுடைய முகம். ஆனால், முகத்தில் உயிர்க் களை இல்லை. கண்கள் விழித்தது விழித்தபடி யிருந்தன. உயிரில்லாத அந்தக் கண்கள் திவான்பகதூரின் இருதயத்தை ஊடுருவிப் பார்ப்பதுபோல் அவருக்கு உணர்ச்சி உண்டாயிற்று.

சட்டென்று அய்யங்கார் எழுந்திருந்து உட்கார்ந்தார். படுக்கையிலிருந்து கீழே குதித்தார். ஜன்னல் ஓரமாகச் சென்று ஜன்னல் கதவைத் திறந்தார். குளிர்ந்த காற்று உள்ளே 'விர்'ரென்று வந்தது. கொஞ்சம் ஆசுவாசம் ஏற்பட்டது. அய்யங்கார் ஜன்னல் ஓரமாக நின்று வெளியே தோட்டத்தில் பார்வையைச் செலுத்தினார்.

ஆஹா! அது என்ன? அதோ அந்த மரத்தின் கிளையில் ஏதோ தொங்குகிறாப் போல் இருக்கிறதே? ஐயோ! ... படீரென்று ஜன்னல் கதவைச் சாத்தினார் அய்யங்கார். இருட்டில் தடவிக் கொண்டே சென்று, 'ஸ்விட்ச்' இருக்குமிடம் கண்டு பிடித்து, மின்சார விளக்கை ஏற்றினார். அலமாரியைத் திறந்து கைக்கு அகப்பட்ட புத்தகம் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து ஸோபாவில் அமர்ந்தார். புத்தகத்தைப் பிரித்தார். ஆகா! புத்தகத்திற்குள் ஏதாவது தேள் ஒளிந்திருந்து அவர் கையில் கொட்டி விட்டதா, என்ன? புத்தகத்தை அப்படித் திடீரென்று போட்டு விட்டுக் குதித்து எழுந்திருக்கிறாரே?

தேளுமில்லை; கீளுமில்லை. அந்தப் புத்தகம் நாலாயிர திவ்யப் பிரபந்தமாயிருந்ததுதான் காரணம். திவ்யப் பிரபந்தத்தைப் பார்த்ததும், உபய வேதாந்தஸார உபந்யாஸ சக்கரவர்த்தி சடகோபாச்சாரிய ஸ்வாமிகள் மதுருப்பட்டி கலக வழக்கில் கூறிய சாட்சியம் அய்யங்காருக்கு ஞாபகம் வந்தது. அவர் என்ன சாட்சி சொன்னார்? "மதுருப்பட்டி கலகம் நடந்த அன்றைக்கு முதல் நாள் இரவு நானும் திருமலையும் திருச்சி ஜங்ஷன் வெயிடிங் ரூமில் திவ்யப் பிரபந்தத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்!" என்றார். "பெரியாழ்வார் பாத சாட்சியாகவும், திருமங்கையாழ்வார் திருவடி சாட்சியாகவும் சத்தியமாய்ச் சொல்கிறேன்" என்று ஆணையிட்டார். சடகோபாச்சாரிய ஸ்வாமியை அஷ்டோத்தர மய்யங்காருக்கு வெகு காலமாகத் தெரியும். பரமபக்தர்; சிறந்த அறிவாளி; உயர்ந்த ஒழுக்கமுள்ளவர். எத்தனையோ தடவை அவரிடம் அஷ்டோத்தர மய்யங்கார் திவ்யப் பிரபந்த பாசுரங்களைக் கேட்டு மனமுருகிக் கண்ணீர் வடித்திருக்கிறார். அப்பேர்ப்பட்டவருடைய சாட்சியைப் பொய் சாட்சி என்று தள்ளிவிட்டு, போலீஸ் சாட்சியத்தையே உண்மையென்று ஏற்றுக் கொண்டு திருமலைக்குத் தூக்கு தண்டனை விதிக்க வேண்டியதாயிற்று! சடகோபாச்சாரியின் சாட்சியம் உண்மையாக இருக்குமோ? திருமலை நிரபராதிதானோ? குற்றமற்ற பையனையா நாளைப் பொழுது விடிந்ததும் தூக்கில் போடப் போகிறார்கள்? அந்தப் பாதகம் தம்முடைய தலையிலா விடியப் போகிறது? ஐயோ! இந்த ஜட்ஜ் உத்தி

யோகத்தை என்னத்திற்காக ஏற்றுக் கொண்டோம்? வக்கீலாகவே இருந்து காலத்தை ஓட்டி யிருக்கக்கூடாதா? ... இப்படி அய்யங்காரின் மனம் எண்ணுவதெல்லாம் எண்ணி அலைந்தது.

2

மதுருப்பட்டி கலகமும், அதன் பயனாக விளைந்த மதுருப்பட்டி கலக வழக்கும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆனால் தேசமெங்கினுமே அப்போது குழப்பமாயிருந்தபடியால் நேயர்கள் சிலர் மறந்து போயிருக்கவும் கூடும். எனவே, வழக்கின் விவரங்களை இங்கே சுருக்கமாகக் கூறுகிறேன்.

சென்ற வருஷம் மகாத்மா காந்தி முதலியவர்கள் கைதியான புதிதில் மதுருப்பட்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு அரை மைல் தூரத்தில் யாரோ ஒரு தண்டவாளத்தைக் கழற்றி நகர்த்தி யிருந்தார்கள். நல்லவேளையாக விபத்து ஒன்றும் நேரவில்லை. பொழுது விடியும் சமயத்தில் வந்த முதல் ரயில் வண்டியின் டிரைவர் ரயில் பாதையில் தண்டவாளம் நகர்ந்திருப்பதைப் பார்த்து வண்டியை நிறுத்தி விட்டான். அரை மணிக்குள் பாதை சரி செய்யப்பட்டு வண்டியும் போய்விட்டது.

பிறகு, மதுருப்பட்டி போலீஸார் தங்கள் கை வரிசையைக் காட்டத் தொடங்கினார்கள். அநேக வீடுகள் சோதனை போடப்பட்டன. ஹைஸ்கூலுக்குப் போய் எல்லா வகுப்புகளும் நடந்து கொண்டிருந்த சமயத்தில் ஆறு மாணாக்கர்களைக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனார்கள். அந்த ஆறு பேரைத் தொடர்ந்து பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் அவ்வளவு பேரும் கோஷித்துக் கொண்டு வெளிக் கிளம்பினார்கள்.

அன்று மதுருப்பட்டி வீதிகளில் புரட்சி கோஷங்கள் வானளாவி எழுந்தன. கூச்சலின் பலத்தைக் கொண்டு மட்டும் சுயராஜ்யம் கிடைப்பதாயிருந்தால், அன்று மதுருப்பட்டிக்கு இரட்டிப்பு சுயராஜ்யம் கிடைத்திருக்க வேண்டும்.

பள்ளிப் பிள்ளைகளின் பெருங் கோஷத்தைக் கேட்டு, வியாபாரிகள் பீதி யடைந்து மளமளவென்று கடைகளை அடைத்தார்கள். வீதிகளில் கூட்டம் அதிகமாயிற்று.

போலீஸ் ஸ்டேஷனைச் சுற்றியும் கூட்டம் சேர ஆரம்பித்தது. ஸ்டேஷனுக்குள் அடைக்கப்பட்டிருந்த மாணாக்கர்கள் ஜன்னல் வழியாக வெளியில் நின்ற கும்பலைப் பார்த்து விட்டு, "புரட்சி ஓங்க!" என்று கோஷமிட்டார்கள். வெளியில் நின்ற கூட்டத்தார் பதில் கோஷம் செய்தார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே மாணாக்கர்களை அடிக்கிறார்கள் என்ற வதந்தி கிளம்பி அந்த ஜனக் கூட்டத்தில் அதி வேகமாகப் பரவிற்று. ஜனங்களின் கொதிப்பு அதிகமாயிற்று. சமீபத்தில் ரோடு ரிப்பேர் செய்வதற்காகக் கப்பிக் கற்கள் கொட்டப்பட்டிருந்தன. இதனால் ஜனங்களின் கொதிப்பு வெளியாவதற்குச் சௌகரியம் ஏற்பட்டது. கப்பிக் கற்கள் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பறந்தன.

போலீஸ்காரர்கள் கையில் துப்பாக்கியுடன் வெளி வந்து கூட்டத்தை நோக்கிக் குறி பார்த்தார்கள். இதன் பலனாகக் கூட்டத்தின் வெறி அதிகமாயிற்று. ஜனங்கள் ஸ்டேஷனை இன்னும் நெருங்கி வந்தார்கள். போலீஸ் துப்பாக்கிகளிலிருந்து வேட்டுக்கள் கிளம்பின. இரண்டொருவர் காயம் பட்டு விழுந்தனர். கூட்டம் ஒரே பாய்ச்சலாகப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பாய்ந்தது. துப்பாக்கியில் ரவைகள் தீர்ந்து விட்டபடியால் போலீஸ் சேவகர்கள் ஸ்டேஷனுக்குள் ஓடிப் புகுந்து கொண்டார்கள். கூட்டத்தில் ஒரே ஜய கோஷ ஆரவாரம்.

இத்துடன் நின்றதா? இல்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரு மண்ணெண்ணெய் டிப்போ இருந்தது. கூட்டத்தில் சிலர் டிப்போவின் கதவை உடைத்து உள்ளே புகுந்து மண்ணெண்ணெய் டின்களை எடுத்து வந்தார்கள். புகை குடிப்பவர்கள் சிலர் நெருப்புப் பெட்டி கொடுத்து உதவினார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் புகையும் நெருப்பும் எழுந்தது.

இதற்குள்ளாகத் தகவல் தெரிந்து ஜில்லா மாஜிஸ்ட்ரேட், போலீஸ் ஸூபரிண்டெண்ட் முதலியவர்கள் பெரிய போலீஸ் படையுடன் வந்து சேர்ந்தார்கள். இந்தத் தடவை நிஜமான துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. சிலர் உடனே உயிர் துறந்து விழுந்தார்கள். பலருக்குக் காயம் ஏற்பட்டது. ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் கூட்டம் கலைந்து போயிற்று.

தியும் அணைக்கப்பட்டது. போலீஸ் ஸ்டேஷன் கட்டிடம் பாதிக்குமேல் எரிந்து போயிற்று.

அன்று மதருப்பட்டியே சுடுகாடு மாதிரி இருந்தது. ஜனங்கள் யாரும் வெளியில் தலை காட்டவில்லை. பிரேதங்களை எடுத்துச் சென்று தகனம் சம்ஸ்காரம் செய்யக் கூட முதலில் யாரும் முன் வரவில்லை. உறவினர்களுக்குத் தகவல் தெரிவதற்கு வெகுநேரம் ஆகிவிட்டது. கடைசியில் எப்படியோ காரியங்கள் நடந்தேறின.

மறுநாள் மதருப்பட்டியில் பிரிட்டிஷ் அதிகாரம் தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தைக் காட்டத் தொடங்கியது.

எங்கே பார்த்தாலும் போலீஸ்மயமாக இருந்தது. போலீஸார் வீடு வீடாகப் புகுந்து முதல் நாள் கலகத்தில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து வந்தார்கள். மொத்தம் 186 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னால் இவர்களில் முப்பது பேர் — தகுந்த சாட்சியமில்லையென்று — விடுவிக்கப்பட்டனர். பாக்கி 156 பேர் மேல் கேஸ் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்திலும் பீனல் கோடிலும் உள்ள செக்ஷன்கள் இந்தக் கேஸில் பிரயோஜனப்பட்ட மாதிரி இது வரை வேறு எந்தக் கேஸிலும் உபயோகப்பட்டது கிடையாது என்று பிரசித்தி பெற்ற 'கிரிமினல்' வக்கீல்கள் சொன்னார்கள்.

திவான்பகதூர் ஜட்ஜ் அஷ்டோத்தரமய்யங்காரின் கோர்ட்டில் உரிய காலத்தில் மேற்படி கலக வழக்கு விசாரணைக்கு வந்தது.

3

மதருப்பட்டி கலக வழக்கில் முதலாவது எதிரி திருமலை என்னும் இளைஞன். இவன் பேரில் மொத்தம் ஒன்பது செக்ஷன்கள் பிரயோகிக்கப்பட்டன. தண்டவாளத்தைப் பெயர்த்தது முதற்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குத் தீ வைத்தது வரையில் பல குற்றங்கள் சுமத்தப்பட்டன. திருமலையின் சார்பாகப் பிரபல வக்கீல்களை வைத்துப் பலமான எதிர் வழக்கும் ஆடப்பட்டது.

திருமலை அவனுடைய பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. மதருப்பட்டிக்கே அவன் செல்லப் பிள்ளை.

நல்ல அறிவாளி; முகவெட்டும் வாக்கு சாதுர்யமும் உள்ளவன்; சிறந்த ஒழுக்கம் படைத்தவன்; பொதுக் காரியங்களில் அளவற்ற ஊக்கமுள்ளவன். இத்தகைய குணங்களினால் அவன் மதருப்பட்டி வாசிகளின் அன்பையும் மதிப்பையும் கவர்ந்திருந்தான்.

காங்கிரஸ் கமிட்டியானாலும் சரி, சங்கீத சபையானாலும் சரி, பழைய மாணவர் சங்கம் — கூட்டுறவு பண்டகசாலை — இலவச வாசகசாலை எதுவானாலும் சரி, திருமலைக்கு ஒரு முக்கியமான நிர்வாகப் பொறுப்பு இருந்தே தீரும்.

எந்தப் பொதுக் காரியத்துக்கானாலும் பணம் வசூலிப்பதற்குத் திருமலை கிளம்பினால், ஒரே சுற்றில் வேண்டிய பணத்தைச் சேர்த்துக்கொண்டு திரும்பி விடுவான். வேறு யார் போனாலும், மதருப்பட்டி வாசிகளிடம் பணம் கிளம்புவது சிரமமான காரியமாயிருக்கும்.

இம்மாதிரியெல்லாம் பொதுக் காரியங்களில் திருமலை ஈடுபட்டிருந்தபடியால், மதருப்பட்டி அதிகாரிகளுக்கும் அவனுக்கும் எப்போதும் சஷ்டாஷ்டகமாகவே இருந்தது.

அப்படிப்பட்ட திருமலைதான் மேற்படி கலக வழக்கில் முதலாவது எதிரி. திருமலையின் சார்பாகச்சொல்லப்பட்ட எதிர் வழக்கு என்னவென்றால், மதருப்பட்டியில் கலகம் நடந்த தினம் அவன் ஊரிலேயே இல்லை, அன்று சாயங்காலந்தான் மதருப்பட்டிக்கு வந்தான் என்பது.

இதற்குத் திருமலையின் சார்பாகச் சாட்சி கூறியவர் உபய வேதாந்தஸார உபந்நியாச சக்ரவர்த்தி சடகோபாச்சாரிய ஸ்வாமிகள் என்பவர். அன்று சாயங்காலம் அவர் ஸ்ரீரங்கத்தில் உபந்நியாசம் செய்து விட்டு ரயிலுக்கு வந்ததாகவும், ரயில் தவறி விட்ட படியால் வெயிடிங் ரூமுக்குப் போனதாகவும், தம்மைப் போலவே ரயில் தவறி அங்கே இருந்த திருமலையைப் பார்த்ததாகவும், அந்தப் பிள்ளையாண்டானைத் தமக்கு ஏற்கெனவே தெரியுமென்றும், இரண்டு பேரும் வெகு நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்ததாகவும் கூறினார். "எதைப்பற்றிப் பேசினீர்கள்?" என்று கேட்டதற்கு, "முக்கியமாக திவ்யப் பிரபந்த பாசுரங்களில் உள்ள கவிதைச் சுவையையும் பக்திப் பெருக்கையும் பற்றிப் பேசினோம்" என்றார்.

"அதைத் தவிர வேறு எந்த விஷயத்தைப் பற்றியாவது பேசினீர்களா?" என்று திருமலையின் வக்கீல் கேட்டார்.

"தேசத்தில் அப்போது நடந்து கொண்டிருந்த விபரீதமான காரியங்களைப் பற்றியும் பேசினோம்."

"விபரீத காரியங்கள் என்றால் என்ன?"

"ரயில் தண்டவாளத்தைப் பெயர்ப்பது முதலிய காரியங்கள்."

"அதைப்பற்றி என்ன பேசினீர்கள்?"

"ரயில் பிரயாணம் ரொம்பவும் அபாயகரமாகப் போனது பற்றிப் பேசினோம். 'இதனாலெல்லாம் என்ன பிரயோஜனம் ஏற்படப் போகிறது? நம்முடைய ஜனங்கள்தானே கஷ்டப்படுவார்கள்? ஒரு ரயில் வண்டி கவிழ்ந்தால், எத்தனை உயிர்ச் சேதம் ஏற்படும்? எத்தனை குடும்பங்கள் துன்பமடையும்?' என்று நான் சொன்னேன். திருமலை என்னுடைய அபிப்பிராயத்தை முழுதும் ஆமோதித்தான். தந்தி யறுப்பது, தண்டவாளம் பெயர்ப்பது முதலியவை பலாத்காரக் காரியங்கள்தான் என்றும், மகாத்மாகாந்தி அந்தக் காரியங்களை ஒருநாளும் அனுமதித்திருக்க மாட்டாரென்றும், ஐந்தாம் படைக்காரர்கள் அவருடைய பெயரைப் பொய்யாக உபயோகப் படுத்துகிறார்கள் என்றும் சொன்னான்."

இந்த சமயத்தில் கவர்ன்மெண்ட் தரப்பு வக்கீல் ஆட்சேபித்து, மேற்படி அபிப்பிராயங்கள் எல்லாம் சாட்சியம் ஆகாதென்றும், அவைகளைப் பதிவு செய்யக் கூடாதென்றும் கூறினார். இத்துடன் சடகோபாச்சாரிய ஸ்வாமியின் சாட்சியம் முடிந்தது.

சடகோபாச்சாரிய ஸ்வாமியின் சாட்சியத்துக்கு நேர்மாறாகப் போலீஸ் தரப்பு சாட்சிகள் சொன்னார்கள், போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த கூட்டத்தில் திருமலையும் இருந்தானென்றும், அவன் போலீஸ் ஸ்டேஷன் காம்பவுண்ட் சுவரில் ஏறி நின்றுகொண்டு, மண்ணெண்ணெய் டின்னை வெளியிலிருந்து வாங்கி உள்ளே இருந்தவர்களிடம் கொடுத்ததைக் கண்ணால் பார்த்ததாகவும் சொன்னார்கள்.

கேஸ் விசாரணை யெல்லாம் சாங்கோபாங்கமாக நடந்தது. நூற்றுக் கணக்கான சாட்சிகள் விசாரிக்கப் பட்டார்கள். கடைசியில் தீர்ப்புக் கூறும் நாள் வந்தது.

முதல் எதிரி திருமலை சம்பந்தமாகத் தீர்மானம் செய்வதில்தான் ஜட்ஜு அஷ்டோத்தரமய்யங்காருக்கு ரொம்பவும் கஷ்டம் ஏற்பட்டது. அவருக்கும் அவருடைய மனச் சாட்சிக்கும் பெரிய போராட்டம் நடந்தது. சடகோபாச்சாரிய ஸ்வாமிகளின் சாட்சியம் உண்மையாகவே தோன்றிற்று. அம்மாதிரி ஒரு சம்பவத்தை அவர் கற்பனை செய்திருக்க முடியாது. அவ்வளவு பச்சையான பொய் சொல்லக் கூடியவரல்ல; சொல்ல வேண்டிய அவசியமும் அவருக்கில்லை. ஆனால், போலீஸ் தரப்பின் திட்டமான சாட்சியத்தை எப்படி நிராகரிப்பது? — நிராகரித்தால் அதனுடைய பலாபலன்கள் என்ன? — 'பெரிய இடத்து' அதிருப்திக்கு ஆளாக நேரிடும். அடுத்த பட்டமளிப்பில் தமக்கு ஸி. ஐ. இ. பட்டம் வருமென்று அய்யங்கார் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். கேவலம் இதற்காக வேண்டி ஒரு காரியம் செய்யப் போவதில்லை. ஆனால் என்ன முகாந்திரத்தைக் கொண்டு ஐந்து போலீஸ்காரர்களின் சாட்சியத்தை நிராகரித்து, ஒரு வைஷ்ணவ உபந்யாசகரின் சாட்சியத்தை ஒப்புக் கொள்வது? — இப்படிச் செய்தால் தம் பேரிலேயே ஒருவேளை சந்தேகம் ஏற்பட்டாலும் ஏற்படலாமல்லவா? ஏன்? லஞ்சம் வாங்கிக் கொண்டு விடுதலை செய்ததாகச் சொன்னாலும் சொல்வார்கள்.

பார்க்கப்போனால், ஜட்ஜினுடைய கடமை என்ன? கோர்ட்டில் தாக்கல் ஆகியிருக்கும் சாட்சியத்தைக் கொண்டுதானே ஜட்ஜ் தீர்ப்புச் சொல்ல வேண்டும்? எல்லாம் வல்ல தெய்வத்தின் சாட்சியாகத்தான் போலீஸ்காரர்களும் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். 'அவர்கள் எல்லாம் பொய் சொல்லியிருக்கிறார்கள் — சடகோபாச்சாரியார் மட்டுந்தான் நிஜம் சொன்னார்' என்று தீர்மானிப்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது?



இவ்விதமெல்லாம் அஷ்டோத்தரமய்யங்காரின் மனதில் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. கடைசியில், போலீஸ் கட்சிதான் ஜயமடைந்தது!

மூன்று பேருக்குத் தூக்கு தண்டனையும், பன்னிரண்டு பேருக்கு ஆயுள்

ஏப்ரல் 10வ. தமிழ்நாட்டில் முக்கிய இடங்களில் ஆரம்பம்



தண்டனையும், மற்றவர்களுக்கு இரண்டு வருஷம் முதல் பத்து வருஷம் வரையில் சிறைவாசமும் அளிக்கப்பட்டது.

தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மூன்றுபேரில் திருமலையும் ஒருவன்.

தீர்ப்புச் சொல்லப்பட்ட அன்றைக்குக் கோர்ட்டில் திருமலையின் தகப்பனாரும் தாயாரும் வந்திருந்தார்கள். சடகோபாச்சாரியாரின் சாட்சியத்தின் பேரில் திருமலைக்கு விடுதலை கிடைத்துவிடலாமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அல்லது சிறைவாச தண்டனையோடாவது போகுமென்று நம்பினார்கள். இதற்கு மாறாக, தூக்கு தண்டனை என்று கேட்டதும், திருமலையின் தாயார் அங்கேயே பிரக்ஞை தப்பி விழுந்துவிட்டாள். திருமலையின் தகப்பனார், "அடே! திருமலை! அடே! திருமலை! எங்கேடா போய்விட்டாய்?" என்று கதறிக்கொண்டே சாலையோடு நெறி கெட்டு ஓடத் தொடங்கினார்.

திருமலையின் தங்கை கர்ப்பமாயிருந்தாள். தீர்ப்பைக் கேட்டதும், அவளுக்குக் குறைப் பிரசவம் ஆகி, ஆஸ்பத்திரியில் கொண்டு போட்டார்கள். ஐந்தாறு நாளைக்கெல்லாம் அவள் கண்ணை மூடினாள்.

4

மதுருப்பட்டி கலக வழக்கில் தீர்ப்புச் சொன்ன நாளிலிருந்து அஷ்டோத்தர மய்யங்காரின் மனம் சரியான நிலைமையில் இல்லை. திருமலை விஷயத்தில் அநியாயம் செய்து விட்டோமோ என்ற எண்ணம் அவர் மனதில் உறுத்திக் கொண்டேயிருந்தது.

தூக்கு தண்டனைக் கைதிகளின் சார்பாகக் கவர்னருக்குக் "கருணை விண்ணப்பம்" செய்யப்பட்டிருக்கிறது என்று அறிந்தபோது அய்யங்காருக்குச் சிறிது திருப்தி ஏற்பட்டது. கவர்னர் கருணை செய்து தூக்கு தண்டனையை ரத்து செய்து விட்டால் தம்முடைய பொறுப்பு நீங்கி விடும் என்று எண்ணினார்.



ஆனால், கவர்னர் அவ்விதம் கருணை செய்யவில்லை. அய்யங்காரின் மனதிலிருந்த பாரமும் நீங்கவில்லை.

நாளுக்கு நாள் அந்த பாரம் அதிகமாயிற்று. தூக்கு தண்டனை நிறைவேற்றும் தினம் நெருங்க நெருங்க இரவில் அவருக்குத் தூக்கம் வருவதே அரிதாயிற்று.

திருமலையின் குற்றமற்ற இளம் முகம் அவர் மனக்கண்ணின் முன் அடிக்கடி தோன்றியது. சர்க்கார் தரப்பு சாட்சியங்களைக் கேட்டுக் கொண்டிருந்தபோது அவன் முகத்தில் தோன்றிய வியப்பும் திகைப்பும் அப்படியே அவருடைய நினைவுக்கு வந்தது. "இதென்ன அபாண்டம்? அன்று நான் ஊரிலேயே இல்லையே?" என்று அவன் கதறியதும் ஞாபகத்துக்கு வந்தது. நினைத்துப் பார்க்கப் பார்க்க அந்தக் குரலில் உண்மை தொனித்ததாக அவருக்குத் தோன்றியது. "ஐயோ! நாம் அநீதிதான் செய்து விட்டோமா? அந்தப் பிள்ளையின் அகால மரணத்துக்கு நாம்தான் பொறுப்பாளியாவோமோ?" என்று எண்ணியபோதெல்லாம் அவருடைய நெஞ்சு திக், திக் என்று அடித்துக் கொண்டது.

• • •

இரவு ஒரு மணி, இரண்டு மணி, மூன்று மணியும் ஆயிற்று. அய்யங்கார் இப்போதும் சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். அவருடைய கண்கள் சில சமயம் தாமே மூடிக் கொள்ளும். அடுத்த நிமிஷம் திடுக்கென்று தூக்கி வாரிப் போட்டுக் கண்ணைத் திறந்து பார்ப்பார். "திருமலையைத் தூக்கில் போட இன்னும் நாலு மணி நேரந்தான் இருக்கிறது — இன்னும் மூன்றரை மணிதான் பாக்கி......" என்று மனம் ஒருபுறத்தில் கணக்குப் போட்டுக்கொண்டேயிருக்கும்.

அதிகாலை ஆறு மணிக்குள் மரண தண்டனைக் கைதிகளைத் தூக்கில்போடுவது வழக்கமென்று அவருக்குத் தெரியும். ஆகையினால்தான்

மணியை அவ்வளவு கவலையுடன் எண்ணினார்.

தூக்க மயக்கத்தில் அய்யங்காருக்கு ஒரு அதிசயமான யோசனை தோன்றிற்று. அந்த யோசனை எப்படி அவர் மனதில் உதித்த தென்பதை அவராலேயே சொல்ல முடியாது. திடீரென்று தோன்றியது.

சில சமயம் கைதிகள் சிறையிலிருந்து தப்பித்து ஓடிவிடுகிறார்கள் அல்லவா? அதிலும் அரசியல் கைதிகள்—புரட்சிக் கைதிகள்—சிறையிலிருந்து தப்புவது சகஜமல்லவா? சுபாஷ் போஸ் கூடப் போலீஸாரை ஏமாற்றி விட்டுக் கம்பி நீட்டி விடவில்லையா?—அந்த மாதிரி திருமலையும் ஏன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிடக்கூடாது? அவ்வளவு துணிச்சலும் சாமர்த்தியமும் அந்த சாதுப் பையனுக்கு எங்கே வரப்போகிறது?—அவன் குற்றம் செய்யாதவனு யிருந்தால் கட்டாயம் ஓடி விடுவான். அதற்குப் பகவான் கூட உதவிசெய்வார். ஏன் செய்யமாட்டார்?

டிங், டிங், டிங், டிங் — மணி நாலு அடித்தது. "ஐயோ! நேரம் நெருங்கி விட்டதே!" என்று அய்யங்கார் மனம் திடுக்கிட்டது. அந்த சமயத்தில் அவருடைய அறையின் கதவு சிறிது திறந்து, ஜில்லென்ற காலைக் காற்று உள்ளே வந்தது.

கதவை மூடலாமென்று அய்யங்கார் எழுந்திருக்கப் பார்த்தார். ஆனால் எழுந்திருக்க வில்லை. அப்படியே திகைத்து உட்கார்ந்து விட்டார்.

ஏனெனில், திறந்த கதவு வழியாக ஒரு மனித உருவம் உள்ளே வந்தது. ஆ! இது யார்? இந்த இளம் முகம் யாருடையது? சந்தேகமென்ன? திருமலைதான்! — ஆகா! இவன் எப்படி இங்கே இந்த நேரத்தில் வந்தான்! நாம் எண்ணியதுபோல் உண்மையாகவே சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்து விட்டானு? — அப்படியானுல் கெட்டிக்காரன்தான்.

திருமலை நிதானமாக நடந்து வந்து அய்யங்காருக்கு எதிரில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

சற்று நேரம் இருவரும் ஒருவரை யொருவர் உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். திருமலையின் முகத்தில் சொல்லமுடியாத ஒரு இரக்க பாவம் காணப்பட்டது.

அய்யங்காரின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. அவர் பேச ஆரம்பித்தபோது அவருடைய குரலை அவராலேயே அடையாளம்

கண்டு பிடிக்க முடியவில்லை. அவ்வளவு கம்மிப் போயிருந்தது.

"யார்? திருமலைதானே?" என்றார் அய்யங்கார்.

"ஆமாம்; அடியேன் திருமலைதான்."

"பொழுது விடிந்தால் — ஆறு மணிக்குள் —" என்று அய்யங்கார் தடுமாறினார்.

"ஆமாம்; ஆறு மணிக்குள் தண்டனை நிறைவேற வேண்டியது."

"நல்ல வேளை — நீ தப்பி வந்தது."

"நல்ல வேளையா?"

"ஆமாம்; நல்ல வேளைதான். உன்னைத் தண்டித்தது பற்றி எனக்கு மனச் சமாதானமே ஏற்படவில்லை. நீ சிறையிலிருந்து ஏன் தப்பித்துக்கொள்ளக் கூடாது என்று நான் கூடச் சற்று முன்பு நினைத்தேன்."

திருமலையின் முகத்தில் ஆச்சரியம் தாண்டவமாடிற்று.

"நீ தப்பி வந்தது பற்றிச் சந்தோஷந்தான்; ஆனால் ......"

"ஆனால் என்ன?"

"நீ இங்கு வந்ததுதான் பிடிக்கவில்லை. இங்கே என்னத்திற்காக வந்தாய்?"

"முக்கியமாக, உங்களைப் பார்ப்பதற்குத்தான் நான் சிறையிலிருந்து தப்பினேன்."

"என்ன? என்னைப் பார்ப்பதற்கா?"

"ஆமாம்; தூக்கு தண்டனையைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நீங்கள் பெரிய பக்தர் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். சடகோபாச்சாரியார் ரொம்பவும் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தாங்கள் என்னைப் பொய்யனென்று நினைத்ததுதான் ரொம்பவும் வருத்த மளித்தது. சத்தியமாய்ச் சொல்கிறேன்; நான் அன்றைக்கு மதகுப்பட்டியில் இல்லை. திருச்சி ஜங்ஷனில்தான் இருந்தேன். சடகோபாச்சாரிய ஸ்வாமிகளிடம் பேசிக் கொண்டிருந்தேன்."

"நீ சொல்வதை முழுதும் நம்புகிறேன். சடகோபாச்சாரியாரும் நிச்சயமாய்ப் பொய் சொல்லியிருக்க மாட்டார். தீர்ப்பு எப்படியோ பிசகாய்ப் போய்விட்டது. நீ தப்பி வந்ததே நல்லதாயிற்று. ஆனால் இங்கே நீ அதிக நேரம் ..."

"இல்லை, இங்கே அதிக நேரம் தாமதிக்கவில்லை. உங்களிடம் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன். என் வார்த்தையை இப்போதாவது நம்புகிறீர்களே, ரொம்ப சந்தோஷம். போய் வருகிறேன். நமஸ்காரம்."

திருமலை ஒரு கும்பிடு போட்டுவிட்டு எழுந்திருந்து போனான்.

* * *

மறுபடியும் அய்யங்காருக்குத் திடுக்கென்று தூக்கி வாரிப் போட்டது. இந்தத் தடவை நாற்காலியிலிருந்து அவர் எழுந்து, திறந்திருந்த கதவண்டை போய் அப்பாலிருந்த தாழ்வாரத்தில் பார்த்தார். அங்கே ஒருவரையும் காணவில்லை. வாசற் கதவைப் போய்ப் பார்த்தார். கதவு உட்புறம் பந்தோபஸ்தாகத் தாளிடப்பட்டிருந்தது!

திருமலை எப்படி உள்ளே வந்தான்? எப்படி வெளியே போனான்?

"சீ! வெறும் பிரமை! திருமலையாவது? வரவாவது?" என்று எண்ணமிட்டவராய் அஷ்டோத்தரமய்யங்கார் தமது அறைக்குத் திரும்பினார். மணி ஐந்தடித்தது.

* * *


இரண்டு நாளைக்குப் பிறகு ஜட்ஜ் அஷ்டோத்தரமய்யங்கார் தினசரிப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, ஒரு மூலையில் சின்ன எழுத்தில் அச்சிட்டிருந்த பின் வரும் செய்தி அவருடைய கவனத்தைக் கவர்ந்தது:—

தூக்குக் கைதியின் மரணம்

மதகுப்பட்டி கலக வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த திருமலை ...... சிறைச்சாலையில் முந்தா நாள் காலை நாலு மணிக்கு இயற்கை மரண மடைந்தான். எனவே, கைதியைத் தூக்குப் போடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

மேற்படி செய்தியைப் படித்ததும் அய்யங்காருக்குத் தலை சுற்றிற்று. அதே நேரத்தில்தான் திருமலை தம்முடைய அறையில் வந்து பேசினான் என்பது நினைவு வந்தது. அய்யங்கார் திடுசென்று கீழே விழுந்தார். டாக்டர்கள் வந்து பார்த்து விட்டு, "மாரடைப்பினால் மரணம்" என்று தெரிவித்தார்கள்.





வெற்றிக்கு ஆயுதம்

"இந்தியன் ஏர் போர்ஸை"ச் சேர்ந்த வீர விமானிகள் இதைக் கையேர்திலும் சத்துருவுக்குப் படுதோல்வி தான். எவ்வெளில் இந்தக் கைப்பிடியின் மூலமாகவே அவர்கள் தங்கள் விமானங்களை தரையிலிருந்து மேலே ஏற்றி சமருக்காக ஆகாயத்தில் பறந்து செல்கின்றனர்.

திறமைவாய்ந்த விமானிகள், சிறந்த பயிற்சி, சிறந்த விமானங்கள் இவைகளால் ஜப்பானிய விமானங்கள் இந்தியாவின் பக்கமே தலைகாட்ட முடியாமல் செய்துவிடலாம். இருந்தாலும் வேறு சில காரியங்களும் வேண்டும். விமானங்களும் வேறு யுத்த தளவாடங்களும் உற்பத்தி செய்வதற்கு ஏராளமான சாமான்கள் வேண்டியிருப்பதால் நாம் அவசியம் தேவைப்படாத சாமான்கள் இல்லாமலே கழித்துவிட வேண்டும். மேலும் யுத்தச் செலவு அமோகமாயிருப்பதால் நம்மால் எவ்வளவு மீதப்படுத்த முடியுமோ அவ்வளவு பணத்தை மீதப்படுத்தி சர்க்காருக்கு கடன் கொடுத்துதவவேண்டும். இத்தகைய சிக்கன வாழ்வின்மூலமே ஜப்பானியர் வராமல் தடுக்க வேண்டுமென்ற நமது உறுதியை நிறைவேற்ற முடியும்.

டிபென்ஸ் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளை


...அல்லது டிபென்ஸ் லோன்களைத்தவிர

வேறெதையும் வாங்குமுன் — **சற்றே யோசியுங்கள்**

ஸர்ட்டிபிகேட்டுகள் உங்கள் தபாலாபீஸில் கிடைக்கும். ரூ. 10-க்கு பத்துவருடத்தில் ரூ. 3/9 லாபம் கிடைக்கிறது.

C. P. U. 30 TM

படித்துப் பார்



சோவியத் ருஷ்யா

[ஆசிரியர் : வெ. சாமிநாத சர்மா ; பிரசுரம்: சக்தி காரியாலயம், மதுரை ; விலை : ரூ. 3—8—0.]

உலக சரித்திரத்தில் மிகவும் மகத்தான சம்பவம் நம் நாளில் நம் கண் முன்னே நடந்து வருகிறது. ருஷியாவில் ராட்சஸ ஜெர்மன் படைகள் தோல்வி மேல் தோல்வி அடைந்து திரும்பி ஓடும் காட்சியைப் பார்க்கிறோம். இத்தகைய அற்புதம் நடக்கக் கூடியது என்பதாக ஒரு வருஷத்துக்கு முன்னால் யாரும் எதிர்பார்க்கவில்லை. இத்தகைய அதிசயத்தின் இரகசியம் என்ன ? "ருஷியாவின் ஆட்சி முறை தான்" என்று தெரிந்தவர்கள் சொல்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அதிசய ருஷியாவையும், அதனுடைய அதிசய ஆட்சி முறையையும் விவரமாகத் தெரிந்துகொள்ள யாருக்குத்தான் ஆவல் இராது? அந்த ஆவலை இந்தப் புத்தகம் பரிபூரணமாய்ப் பூர்த்தி செய்கிறது. இந் நூலாசிரியர் பழைய "தேசபக்தன்" "நவசக்தி" பத்திரிகைகளில் உதவி ஆசிரியரா யிருந்தவர். எந்த விஷயமா யிருந்தாலும் சிறந்த ஆராய்ச்சி முறையைக் கையாண்டு நன்கு அறிந்து பிறருக்கும் விளங்க வைக்கக் கூடியவர். இந்த நூலை எழுதத் தொடங்குவதற்கு முன் ஆசிரியர் படித்து ஆராய்ந்த முப்பத்திரண்டு புத்தகங்களின் ஜாபிதா தரப்பட்டிருக்கிறது. இவ்வளவு உழைப்பு எடுத்து எழுதப் பெற்ற புத்தகம் எவ்வளவு சிறந்த முறையில் அமைந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. "சக்தி" பிரசுரங்கள் எல்லாவற்றையும் போல் இந்தப் புத்தகமும் கண்ணைக் கவரும் வனப்புடன் விளங்குகிறது.

சங்க நூற் கட்டுரைகள்

அல்லது

பழந் தமிழர் நாகரிகம்

[ஆசிரியர் : தி. சு. பாலசுந்தரன் (இளவழகனார்) ; பிரசுரம் : சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி, சென்னை ; விலை : ரூ. 1—8—0.]

சங்க நூல்களை நன்கு ஆராய்ச்சி செய்து, அந்தக் காலத்துப் பழந் தமிழர்களின் வாழ்க்கை முறையை உணவு, உடை, கல்வி, பழக்கம், வழக்கம், ஒழுக்கம், விழுப்பம் என்னும் தலைப்புக்களின் கீழ் விவரித்திருக்கிறார். ஏறக்குறைய சங்க நூல் நடையிலேயே எழுதியிருப்பதால், சங்க நூல்களைப் படித்திருப்பவர்களுக்கு இந்த ஆராய்ச்சி நூலைப் படிப்பதில் சிரமம் ஏற்படாது. மற்றவர்கள் இந்த நூலைக் கொஞ்சம் சிரமம் எடுத்துப் படித்துக் கொண்டால், பிறகு சங்க நூல்களைப் படிப்பதில் அவ்வளவு சிரமம் இராது.

இன்பம் எது ?

[ஆசிரியர் : ராய சொக்கலிங்கன் ; பிரசுரம் : சக்தி காரியாலயம், காரைக்குடி ; விலை : ரூ. 1.]

நல்ல நல்ல உபதேச மொழிகளை யாராவது கூறினால் அது கேட்பதற்கு வேப்பங் காயாகத் தோன்றும். அனுபவித்துக் கொண்டு கேட்டுத் தொலைப்பார்கள். ஆனால் ஸ்ரீ ராய. சொக்கலிங்கம், ஊழியம், பெருநெறி, அகத் தூய்மை, உண்மை முதலிய சன்மார்க்க நெறிகளை இப் புத்தகத்தில் அறிவுறுத்தும்போது, யாருக்கும் வேப்பங்காயாகத் தோன்றாது. 'இன்பம் எது?' என்று கேட்டு, விடை தெரியாமல் நம்மைத் திக்குமுக்காடச் செய்துவிட்டு, கடைசியில் 'பிறருக்குப் பணி செய்வதே இன்பம்' என்று பதில் சொல்லித் தெளிய வைக்கிறார்.

கல்வி (மாதப் பத்திரிகை)

[ஆசிரியர் : எஸ். கோபாலகிருஷ்ணன், 11, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை. விலை : தனிப் பிரதி அணா 3.]

குழந்தைகளுக்காக ஒரு பத்திரிகை நடத்தி அப் பத்திரிகையைக் குழந்தைகள் புரிந்து கொள்ளும்படி செய்துவிட்டால் அது மிக அதிசயமான விஷயந்தான். சென்னையிலிருந்து பிரசுரமாகும் "கல்வி" என்ற குழந்தைகள் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தால் அந்த அதிசயம் நடந்துவிட்டதென்றே தோன்றுகிறது.

அவர் யார்?

"குகப்ரியை"

"பனி சிலுசிலுவென்று அடிக்கத் தொடங்கிவிட்டது. மணி நான்கு அடிக்கும்பொழுதே குளிர ஆரம்பித்துவிடுகிறது. 'சிவனே' என்று வீட்டிலே அடைந்து கிடக்க முடிகிறதா? பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ, ஒரு பாட்டுக் கச்சேரிக்காவது போகச் சொல்கிறது" என்று கூறினான் காமாக்ஷி.

அவன் வார்த்தைகளை ஆமோதிப்பது போல் தொண்டையைக் கனைத்துச் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன். பாடகர் அதி அற்புதமாய் ஸ்வர வரிசைகளைப் பாடி ஜால வேடிக்கைகள் செய்து கொண்டிருந்தார். அவர் நிறுத்தினாரோ இல்லையோ மறு விநாடி புளியம் பழம் உலுக்குவதுபோல ஒரே கரகோஷம். இடையிலே மிருதங்கக்காரருக்கு உரிய சந்தர்ப்பம். தனக்குத் தெரிந்த திறமையையெல்லாம் ஒருங்கே கொட்டிவிட எண்ணியவர்போல், கண்களையும் முகத்தையும் கோணிக் கொண்டு வித விதமான பாவங்கள் தோன்ற அபிநயிக்கலானார்.

அதற்கு ஏற்றாற்போல எதிரே உட்கார்ந்திருந்தவர்களில் இளம் வித்வான்களும் பழம் பெருச்சாளிகளும் 'தகிட தரிகிட' என்று தங்களால் இயன்ற வரையில் உரத்த சப்தமாய்த் தாளம் போடத் தொடங்கினார்கள்.

இதற்கிடையில், எங்கள் மகா சபையில், அதாவது ஸ்திரீகள் பகுதியில் அங்கங்கே குட்டி விமரிசனங்கள்! இரட்டைத் தவில் உயர்வா? மிருதங்கம் உயர்வா? — என்று வெகு விரிவாக ஜதிகளை ஒட்டி விமரிசனம். எனக்கோ அசாத்யத் தலைவலி. "ஒரே அடியாய் இந்தப் பாழும் மிருதங்கத்தையும் கஞ்சிராவையும் எத்தனை மணி நேரம் கேட்பது? தாள வாத்தியத்திலேயே ஈடுபடும் பரம ரஸிகர்கள் மிருதங்கத்தையும் கஞ்சிராவையும் தனிக் கச்சேரி ஏற்பாடு செய்து கேட்டுக் கொள்ளட்டுமே. அவைகளுக்குப் பக்க வாத்யம் வேண்டுமானால், சங்கு, சேகண்டி, கிரிகிட்டகம், ஜாலரா, இவைகளை வைத்துக் கொள்ளட்டுமே! இடையிலே இதென்ன தலை வேதனை?" என்று வெடு வெடுத்துச் சொன்னேன்.

"அடேயப்பா! என்ன நீங்கள், ஆனாலும் ஒரே அடியாய்க் கிளம்பிவிட்டீர்களே! ஏன்? ஏதாவது சுவாமி வந்துவிட்டதா என்ன? தாளந்தானே சங்கீதத்தின் உயிர். 'சுருதி மாதா லய: பிதா'ன்னு பிரமாணமாச்சே. உலகத்திலே தாளமில்லாமல் எது நடக்கிறது? இதயத் துடிப்பைப் பாருங்கள்; அது ஒரு தாள ஒத்துக்கிசையத்தான் அடிக்கிறது. குதிரை 'காலப்'பில் ஓடும்போது கவனியுங்கள். டடக் டடடக் என்று அதுவும் ஒரு தாளந்தான்......" என்று ஏதேதோ அடுக்கிக் கொண்டே போனான் ரோஸி.

எனக்கோ ஏண்டா இவனுடன் பேச்சுக் கொடுத்தோம் என்று ஆகிவிட்டது. ஆனால் வேறு வழியில்லை. அவன் சொல்லுவதை ஆமோதித்துத்தான் தீர வேண்டும். ஏன் தெரியுமோ? அவனும் நானும் ஏதோ ஒரு சங்கத்தில் சமூக சேவை செய்கிறவர்கள் என்று பெயர். இன்று அவனை மடக்கிவிட்டால் நாளை எங்கேயாவது ஒரு பிரசங்கத்தில் என்னைச் சிக்க வைத்து விடுவான். அதற்குப் பயந்து ஒப்புக் கொள்ளுவதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தேன்.

ஆனால் எதிரில் தோன்றிய காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது.

மிஸஸ் கமலா ஜகன்னாதன் சர்வாபரண பூஷிதையாய் என் முன் வரிசையில் வந்து உட்கார்ந்தாள். "அடாடா!



......ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார்.

"என்ன அழகு! முகத்திலேதான் என்ன கவர்ச்சி!" என்றேன். ரோஸி என் காதைக் கடித்தாள். அவள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்கு வனஜாம்பரம் வாங்குகிறாளாம். கடையிலே எந்தப் புது மோஸ்தர் துணி மணிகள் வந்தாலும் முதல் பேரம் இவள்தானாம். அவள் போட்டிருந்த ஸ்லிப்பரும், பர்ஸூம், 1943 மோஸ்தராம்.

என் மனம் நெடுந்தூரம் பின்னோக்கிச் சென்றது. "அடாடா! நாமும் பிறந்தோமே பெண் என்று! என் கணவர் பத்து ரூபாய் கொடுத்து சங்கீத வித்வத் சபைக்கு டிக்கெட் வாங்க மூக்கால் அழுகிறார். மற்றவர்களைப் பார்த்தாவது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று புரிந்தால்தானே!...... அதிருஷ்டசாலி" என்று பெருமூச்சு விட்டேன்.

திடீரென்று என் கனவு தடைப்பட்டது. பாகவதர் துரிதகாலத்தில் பல்லவி ஸ்வரம் பாடி முடித்தாராம். ஒரே கரகோஷம். கமலா ஜகன்னாதன் முல்லைச் சிரிப்புடன் கைகளைத் தட்டியவளாய் என்னைப் பார்த்தாள். இன்னும் பல ஸ்திரீகள் கை கொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்தபோது, "இவர்கள் இப்படித் தங்களை மறந்திருக்கிறார்களே! இவர்களுக்குக் குடும்பக் கவலையே கிடையாது போலிருக்கிறது. என்ன நாகரிகம் வேண்டியிருக்கிறது?" என்று எண்ணியவளாய் நான் அவள் பார்வைக்கு வெட்கித் தலை குனிந்தேன்.

பாடகர் சோடா சாப்பிடுவதில் முனைந்தார். மிருதங்கக்காரருக்கு மறுபடியும் ஒரு சந்தர்ப்பம்.

புருஷர்கள் உட்காருமிடத்தில் ஒரு கோடியில் பல வரிசைகளுக்கு முன் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். என் கண்கள் அங்கே தங்கின. தலையில் நீல மப்ளர்'. 'மப்ளர்' முழுவதும் ஒரே பொத்தல். கழுதை நிறமுள்ள ஒரு கோட்டு. அந்தக் கோட்டில் ஆயிரம் தையல். கழுத்தின் பின்புறமெல்லாம் கந்தையாய் சிங்கம் பிடரியைச் சிலிர்த்து நிற்பதுபோல் நின்றுகொண்டிருந்தது.

"ஐயோ பாவம்! பனி காலம்! ஒரு நல்ல மப்ளரும் கோட்டுங் கூட இல்லை போலிருக்கிறது. ஆனால் இவ்வளவு ஏழ்மையிலிருப்பவர் இரண்டாம் வகுப்புக்கு எப்படி டிக்கெட் வாங்கியிருப்பார்? ஒருவேளை நடுத்தரமான குடும்பத்தைச் சேர்ந்தவராயிருக்கலாம். என்னதா னிருந்தாலும் ஒரு வீட்டிலே பெண்கள் இவ்வளவு கேவலமாகவா

இருப்பார்கள், புருஷனுடைய கிழிந்த சட்டையைக்கூடத் தைக்காமல்? மப்ளர் தான் என்ன அற்புதம்! 'ஸஹஸ்ராக்ஷம்' தான். சே! சே! சே! என்ன பெண்கள்? இப்படிப்பட்ட பெண்களால் தான் நம்முடைய நாடு மிக மிகக் கேவலமான நிலைக்கு வந்து விட்டது. வீடுவாசல், கணவன், துணி, மணிகள் இவைகளைக் கூடக் கவனியாத அந்த 'லங்கிணி' எப்பேர்ப்பட்டவளாயிருப்பாளோ? அந்தப் புண்ணிய வதியைக் கட்டாயம் ஒரு நாள் பார்க்கத்தான் வேண்டும்" என்று எண்ணினேன்.

பாகவதர் "பவமான ஸுதுடு" என்று தொடங்கு முன்னரே நான் கிளம்பி விட்டேன். ஓட்டமும் நடையுமாய் வந்து பஸ்ஸில் ஏறினேன். பஸ் புறப்பட்டதும் பளிச்சென்று விளக்குகள் எரியத் தொடங்கின. என்ன ஆச்சரியம்! நான் சபையில் பார்த்த அந்த அப்பாவி மனிதர் முன் ஸீட்டில் உட்கார்ந்திருந்தார். சந்தேகமில்லை.

"மாம்பலம் ஒரு டிக்கெட்" என்ற குரல் கேட்டு எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்த மனிதர் சில்லறையை வாங்கும் பொருட்டுத் திரும்பினார். திடீரென்று பாதாளத்தில் விழுந்தாற்போலிருந்தது.

அவர் யார்? வேறு யாருமில்லை; சாக்ஷாத் என் கணவரேதான்.

குணம் தெரிகிறது!



செவிடர்:—என் காதைக் குணப்படுத்தியதற்கு நான் உங்களுக்கு எவ்வளவு தர வேண்டும்?

டாக்டர்:—பத்து ரூபாய்.

செவிடர்:—இருபது ரூபாயா? ரொம்ப அதிகம்!

டாக்டர்:—இல்லை, இல்லை. நாற்பது ரூபாய்!

கம்பர் தரும் காட்சி

[டி. கே. சிதம்பரநாத முதலியார்]

41. கால் வைக்க இடமில்லை!

சீதையினிடம் அருமையும் அன்பும் பாராட்டுகிறவர்கள் எத்தனையோ பேர். அவர்களில் சிலரைத் தாய் முறை கொண்டாடுவாள் அவள். சிலரைத் தமக்கை முறை கொண்டாடுவாள். மற்றும் கூட்டாளிகளாக அவளுடன் உறவாடிக் கொண்டிருப்பவர்கள் பலர்.

இவர்கள் எல்லோரும் சூழ்ந்து கொண்டிருக்கும் போதுதான் ராமன் வந்தான். மரவுரி தரித்தவனாய்க் காட்டுக்குப் போகிற வழியில் சீதையிடம் சொல்லிவிட்டுப் போவதற்காக வந்தான். சீதை தானும் வருவேன் என்றாள். ராமன் தடுத்துப் பார்த்தான். சீதை என்ன செய்தாள்? உள்கட்டுக்குப் போய் மரவுரி யொன்றை உடுத்திக் கொண்டு திரும்பி வந்து ராமனுடைய கையைப் பிடித்த வண்ணமாய் நின்றாள் — காட்டுக்குப் போகத்தான்.

சீதை காட்டுக்குப் போகிறாள் என்பதை நினைக்கத்தான் முடியுமா, தாய்மாருக்கும் மற்றப் பெண்களுக்கும்?

தாயர் தங்கையர்
    தன்துணைச் சேடியர்
ஆயம் மன்னிய
    அன்பினர் என்றிவர்
தீயின் மூழ்கினர்
    ஒத்தனர்: செங்கணான்
தூய தையலை
    நோக்கினன் சொல்லுவான்.

[தங்கையர்: தமக்கை முறைக்கு உரியவர்கள்; ஆயம் மன்னிய அன்பினர்: கூட்டாளிகளாக வந்து சதா சீதையோடு விளையாடிப் பொழுது போக்கிக் கொண்டிருப்பவர்கள்; செங்கணான்: ராமன்; தூய தையலை நோக்கினன் சொல்லுவான்: சீதையை நோக்கிச் சொல்லுகிறான்.]

தாய்மாரும் மற்றப் பெண்களும் படுகிற பாட்டைப் பார்த்தான் ராமன். அவனுக்குச் சகிக்க முடியவில்லை. சீதையோ ஒரு வித கவலையுமில்லாமல் முக மலர்ச்சியோடு நிற்கிறாள். அவளுடைய முத்துப் போன்ற பற்கள் துலாம்பரமாய்த் தெரிகின்றன. ராமனுக்கோ ஒன்றும் ஓடவில்லை. சீதையைப் பார்த்துச் சொல்லுகிறான்: 'இது என்ன காரியம்? உனக்கு என்ன, விஷயமே தெரியவில்லையே?

முல்லை யும்கடல்
    முத்தும்எ திர்ப்பினும்
வெல்லும் வெண்நகை-
    யாய்! விளை(வு) உன்னுவாய்
அல்லை! போத
    அமைந்தனை; ஆதலின்
எல்லை அற்ற
    இடர்தரு வாய்' என்றான்.

[முல்லையும் கடல் முத்தும் எதிர்ப்பினும் வெல்லும் வெண்நகையாய்: முல்லை மொட்டும் கடல் முத்தும் எதிர்த்து வந்தாலும் உன்னுடைய பற்களைப் பார்த்துத் தோற்றுத்தான் போய்விடும்; (எங்களுக்கெல்லாம் விளங்காத முறையில் நீ மகிழ்ச்சி கொண்டிருக்கிறாய்.) விளைவு உன்னுவாய் அல்லை: என்ன என்ன நேரக்கூடும் என்பதை எண்ணவில்லையே; போத அமைந்தனை: காட்டுக்குப் போகப் புறப்பட்டும் விட்டாயே; எல்லை அற்ற இடர் தருவாய்: அளவில்லாதபடி எனக்குத் தொந்தரவு கொடுப்பாய் போலிருக்கிறதே.]

தொந்தரவு கொடுப்பாய் என்று ராமன் சொன்னானோ இல்லையோ, வந்து விட்டது கோபம் சீதைக்கு.

கொற்ற வன்அது
    கூறலும், கோகிலம்
செற்ற(து) அன்ன
    குதலையள் சீறுவாள்;

• கூற்று நின்ற
துயரம்இ(து) ஒன்றுமே

எற்து றந்தபின்
இன்பங் கொலாம்?' என்ருன்.

[கொற்றவன் அது கூற லும்: ராமன் அப்படிச் சொல்லவும்; கோகிலம் செற்றது அன்ன குதலையள் கூறுவாள்: குயில் தோற்றது என்று சொல்லும்படியாக அவ்வளவு இனிய மழலைச் சொல்லில், ஒரே கோபமாய்ச் சொல்லுகிருள்; உற்று நின்ற துயரம் இது ஒன்றுமே: ஓகோ, நான் காட்டுக்கு உடன் வருவதால் ஏற்படும் துயரம்தான் துயரமோ; என் துறந்தபின் இன்பங் கொலாம் என்ருள்: என்னை இங்கே விட்டுவிட்டுப் போய்விட்டால் உனக்கு ஒரே இன்பந்தானே — என்ருள்.]

சீதையின் கோபத்தைப் பார்த்தான் ராமன். ஒன்றுமே பேசவில்லை. அப்படியே தெருவுக்குப் போய்விட்டான்.

பிறிதோர் மாற்றம்
பெருந்தகை பேசலன்,

மறுகி வீழ்ந்தழும்
மைந்தரும் மாதரும்

செறுவில் வீழ்ந்த
நெடுந்தெருச் சென்றனன்,—

நெறிபெ ருமை
அரிதினில் நீங்குவான்.

[பிறிதோர் மாற்றம் பெருந்தகை பேசலன்: வேறு வார்த்தை சொல்ல முடியவில்லை ராமனுக்கு; மறுகி வீழ்ந்தழும் மைந்தரும் மாதரும்: அறிவு மயங்கி நிலத்தில் விழுந்து அழும் ஆடவரும் பெண்டிரும்; செறுவில் வீழ்ந்த நெடுந்தெருச் சென்றனர்: நெருங்கி ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கிடந்த பெரிய தெருவில் நடந்து போகிருன்; நெறி பெருமை அரிதினில் நீங்குவான்: நடந்து போவதற்கு வழியில்லாதபடி தெருவில் ஜனங்கள் மயங்கிக் கிடக்கிருர்கள்; மிக்க சிரமத்துடன் இடைவெளி பார்த்துப் பார்த்துக் கால் எடுத்து வைத்து நடந்து செல்கிருன்.]

ராமன் காட்டுக்குப் போகப் போகிருன், சீதையும்போகப்போகிருள் என்ற வார்த்தை முதலில் வந்தது. பிறகு புறப்பட்டே விட்டார்கள் என்பதைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டார்கள் தெருவிலிருந்த ஜனங்கள். அவர்களுக்கு நிலை கொள்ளவா செய்யும்? அப்படி அப்படியே மயங்கித் தெருவில் விழுகிருர்கள். கால்வைக்க இடமிருக்குமா ராமனுக்கு? செய்யுளில் எவ்வளவு லாகவமாய் பாவ உருவம் வருகிறது, பாருங்கள்!

கவிச் சித்திர விளக்கம்


நாயகன் வெளியே போயிருப்பான்; வேலை முடிந்ததும் திரும்பி வருவான். இரவு நேரமாய் விட்டால் அவள் வீட்டுக்குள்ளே தூங்கிக் கொண்டிருப்பாள். கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் சொல்லுவான். குலைந்து கிடக்கும் கூந்தலை அப்படியே ஒரு கையால் எடுத்துச் சொருகிக்கொண்டு, மற்றொரு கையால் முன்தானையை ஒழுங்கு செய்து கொண்டே வந்து கதவைத் திறப்பாளாம் காதலி.

அப்படித் தூக்க மயக்கத்தோடு வந்து கதவைத் திறக்கும்போதும், அந்த முகம் எவ்வளவு மலர்ச்சியோடிருக்கும்! எவ்வளவு வசீகரமா யிருக்கும்! அந்த அழகை எப்படி மறக்க முடியும்?

"கலிங்கத்துப் போரிலே நமது மகாராஜாவுக்குக் கிடைத்திருக்கும் வெற்றியைப் பாடலாம்; கதவைத் திறந்துகொண்டு வா" என்று காதலியைக் காதலன் அழைக்கிருன். அவள் எப்படி வந்து கதவைத் திறப்பாள்! — என்ற மனப் படத்தோடு காதலன் அழைப்பது, கலிங்கத்துப் பரணி ஆசிரியர் வாயிலாக ஓர் அற்புதமான சப்த சித்திரமாய் உருவெடுத்து வருகிறது.

இந்தப் பாட்டிலே காதலியின் முகத்தைத் திருமுகம் என்று சொல்லாமல் அவளுடைய தூக்க மயக்கத்தை ('அனந்த'லை)த் திரு அனந்தல் என்று சொல்லுவது எவ்வளவு ரஸமா யிருக்கிறது!






சொருகு கொந்தளகம் ஒருகை மேலலைய
ஒருகை கீழலைசெய் துகிலொடே
திருவ னந்தலினும் முகம லர்ந்துவரும்
தெரிவை மாதர்கடை திறமினோ.

[கொந்தளகம்: பூங்கொத்து அணியும் கூந்தல்; துகில்: ஆடை; அனந்தல்: தூக்கம்.]

கவிச் சித்திரம்—11 —கலிங்கத்துப்பரணி.



கொக்கின் கோபம்

[வி. ஜி.]

அன்று பறவைகள் பள்ளிக்கூடத்திற்குக் கிளி வாத்தியார் கொஞ்சம் நேரம் கழித்து வந்தார். அதற்குள் குயில் ஒரு பெரிய கலகத்தை உண்டாக்கி விட்டது. "நம்மில் யார் ரொம்பவும் அழகு? சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்று குயில் மற்றப் பறவைகளைப் பார்த்துக் கேட்டது.

"ஏன், நான்தான்!" என்றது காகம்.


அதைக் கேட்டு மற்றப் பறவைகளெல்லாம் சிரித்தன. காக்கைக்குக் கோபம் வந்து விட்டது. அது குயிலைப் பார்த்து, "நீ மட்டும் ரொம்ப ரொம்ப அழகோ?" என்று ஆத்திரத்துடன் கேட்டது.

அதற்குக் குயில் பதில் சொல்வதற்குள் கொக்கு, "ஏன், நீங்கள் இருவரும் கிருஷ்ண பரமாத்மாவின் நிறமாய்த்தான் இருக்கிறீர்கள்! உங்களுக்கு அழகில் என்ன குறைவு?" என்று சொல்லி விட்டு, 'களுக்' கென்று சிரித்தது.

இந்த சமயத்தில் சிட்டுக் குருவி, "நான் சொல்லட்டுமா? நம் எல்லோரையும் விட அழகில் சிறந்தவர் நம்முடைய கிளி வாத்தியார்தான்" என்றது.

அதைக் கேட்டு மயில், "ஏன், நான் மட்டும் அழகா யில்லையா?" என்று தன் தோகையை விரித்து ஆடிக் காண்பித்தது.

அதைப் பார்த்து விட்டு, "ஏன், எனக்கு மட்டும் அந்தத் தோகை யில்லையா?" என்று வான்கோழி கர்வத்துடன் தன் தோகையை விரித்து மயில் மாதிரி ஆடிற்று.



வான்கோழியின் நடனத்தைப் பார்த்து விட்டு, கொக்கு 'குபீர்' என்று வாய் விட்டுச் சிரித்து விட்டது. அத்துடன் நில்லாமல், தானும் அதே மாதிரி நடனம் செய்து, வான்கோழிக்கு 'அழகு' காட்டிற்று.

தன்னைக் கொக்கு நையாண்டி செய்ததைப் பார்த்ததும், வான்கோழிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. அந்தக் கோபத்தில் அது கொக்கின்

மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. அதனிடமிருந்து தப்பிக் கொக்கு மேஜையின் மீது ஏறிக் கொண்டது. அப்பொழுதும் வான்கோழி சும்மா விடவில்லை. அதுவும் மேஜையின் மீது தாவி ஏறி, கொக்கைத் தனது இறக்கையினால் 'படீர்', 'படீர்' என்று அடித்தது. கொக்கு தனது நீண்ட மூக்கினால் வான்கோழியைக் குத்திற்று.

இந்தச் சண்டையின் வேகத்தில் மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த சிவப்பு மைப்புட்டி சாய்ந்து, மேஜையெல்லாம் ஒரே சிவப்பு மசியாக ஆகிவிட்டது. அதன்மீது விழுந்து புரண்டதால் வெள்ளைக் கொக்கு சிவப்புக் கொக்காகிவிட்டது!

இந்த சமயத்தில் கிளி வாத்தியார் வந்துவிடவே எல்லாப் பறவைகளும் அதனதன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டன. கொக்கும் தனது இடத்திற்கு வருத்தத்துடன் திரும்பி வந்து உட்கார்ந்தது. அதைப் பார்க்கும்போது வான் கோழிக்குக் கூடக் கொஞ்சம் வருத்தமாய்த்தானிருந்தது.

"அப்பொழுதே அதனிடம் அகப்பட்டுக்கொள்ளாமல் பறந்து போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்று கொக்கைப் பார்த்துக் காகம் அனுதாபத்துடன் சொல்லிற்று.

"நான் என்ன, அவ்வளவு இளைத்தவனா? அதனிடம் பயந்து கொண்டு பறந்து போவதற்கு?" என்று கொக்கு வீராவேசத்துடன் சொல்லி விட்டு, "நாளைக்குப் பார், அதை என்ன செய்கிறேன்!" என்று முணுமுணுத்தது.

இந்தச் சம்பாஷணை கிளி வாத்தியாரின் காதில் லேசாக விழுந்ததும், அவர் 'உஸ்' என்று இரைந்தார். உடனே எல்லாப் பறவைகளும் மௌனம் சாதித்தன.

கிளி வாத்தியார் மேஜையின்மீது கொட்டியிருந்த சிவப்பு மசியைப் பார்த்ததும், "யார் இப்படி மசியைக் கொட்டியது?" என்று கேட்டார்.

குயில் நடந்தவற்றையெல்லாம் சொல்லிற்று. கலகத்தில் எல்லாப் பறவைகளும் கலந்திருக்கவே, அதைக் கேட்ட கிளி வாத்தியாருக்கு யாரைக் கண்டிப்பது என்று புரியவில்லை. எனவே, எல்லாப் பறவைகளையும் பார்த்துப் பொதுவாக, "இனிமேல் இப்படி ஏதாவது செய்தீர்களானால் உங்கள் எல்லோரையும் வகுப்பை விட்டுத் துரத்திவிடுவேன்!" என்று பயமுறுத்திவிட்டுப் பாடத்தை ஆரம்பித்தார்.

அன்று பகல் எல்லாப் பறவைகளும் இரை தேடச் சென்றன. வழக்கம்போல் கொக்கு குளத்தங்கரைக்குச் சென்றது. இத்தனை நாள் எவ்வளவு நேரம் அந்தக் குளத்தங் கரையண்டை நின்று ஒற்றைக் காலால் தவம் செய்து கொண்டிருந்தாலும், அதற்கு ஒரு



மீன் கூடக் கிடைப்பது கஷ்டம். அன்று என்னடா என்ருல், அதற்கு ரொம்ப ரொம்ப மீன்கள் கிடைத்தன. காரணம், அன்று அந்தக் கொக்கு சிவப்புக் கொக்கா யிருந்ததுதான்!

அதைப் பார்த்தும் அன்று மீன்களெல்லாம் நிஜக் கொக்கு என்று நினையாமல், தங்கள் பாட்டுக்குத் தண்ணீரில் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. அவைகள் அப்படி விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும், கொக்குக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சில மீன்கள் அதை ஏதோ ஒரு விநோத ஜந்து என்றுகூட நினைத்து வேடிக்கை பார்ப்பதற்காகக் குதித்துக்கொண்டு அதனருகில் ஓடி வந்தன.

அப்பொழுதுதான் அன்று காலை வான்கோழியுடன் வம்புக்குச் சென்று, சிவப்பு மசியைப் பூசிக்கொண்டது அதன் நினைவிற்கு வந்தது.

"ஆஹா! வான்கோழியுடன் சண்டை போட்டது கூட எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! அன்ஞெரு நாள் கிளி வாத்தியார், 'எல்லாம் நன்மைக்கே' என்று சொன்னது எவ்வளவு உண்மை!" என்று கொக்கு எண்ணி வியந்தது.

இரை தேடச் சென்ற பறவைகளெல்லாம் அன்று மத்தியானம் பள்ளிக்கூடத்திற்குத் திரும்பின. கொக்கு முதலில் வான்கோழியிடம் தன்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்தது. அதைக் கேட்டு வான்கோழியும் சண்டையை மறந்து சந்தோஷமடைந்தது.



மணிக் கதை—7



அப்பாவின் பாக்கெட் வாட்சை உடைத்துவிட்டு, அதற்குப் பதிலாய்க் கடிகாரம் வைக்கிருன்!

தொடர் கதை

உடைந்த வளையல்

து. ரா.

இரண்டாம் அத்தியாயம்

“ டண் டண் டண்!” என்று சாந்தி நகர் ‘மெதாடிஸ்ட் மிஷன்’ பள்ளிக் கூடத்தின் மணி அடித்தது.

பிள்ளைகள் “ஓ” என்று இரைந்து கொண்டு பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்தார்கள். அன்று அவர்களுக்கு இருந்த குதூகலம் கொஞ்சநஞ்சமல்ல. அன்றுதான் அவர்கள் பள்ளிக் கூடத்தின் கடைசி நாள். [illegible]ாந்திரப் பரீட்சை நேற்றுடன் முடிவடைந்து விட்டது. அன்றையிலிருந்து கோடை விடுமுறை ஆரம்ப[illegible] விடுமுறைக்காக வீட்டுக் [illegible]கள் கொடுப்பதற்காகவே [illegible]யர்கள் அன்றைக்குப் பின்[illegible] வரச் சொல்லியிருந்தார்கள்.



“டேய் மணி! எத்தனை கணக்குடா கொடுத்திருக்கார் உங்க வாத்தியார்?” என்று ஒரு சிறுவனை இன்னொருவன் விசாரித்தான்.

“ஐம்பது கணக்குடா. ஒரு நாளைக்கு ஒண்ணு. எல்லாம் சுலபம்டா. பவுன் ஷில்லிங் பென்ஸ் பெருக்கல், வகுத்தல்; காலமும் தூரமும்; சராசரி; வட்டிக் கணக்கு; இவ்வளவுதாண்டா! எல்லாத்தையும் நான் ஒரே நாளிலே போட்டுடப் போறேன்....”

“எங்களுக்கும் ஐம்பது கணக்குத் தான். நீ கணக்குப் போடறச்சே சொல்லு. நானும் ஒங்க ஆத்துக்கு வரேன். ரெண்டு பேரும் சேர்ந்து போடலாம். ஏண்டா, ‘காப்பி’ எத்தனை பக்கம் கொடுத்திருக்கார்?”

மணி சந்தோஷத்துடன் “காப்பி கிடையாதுடா! ரசகுண்டு சொல்லித்து, ‘நூறு பக்கம் நோட்டு வாங்கி ஐம்பது பக்கம் இங்கிலீஷும், ஐம்பது பக்கம் தமிழ் காப்பியும் எழுதணும்’ என்று. ஹெட் மாஸ்டர் வந்து காப்பி வேண்டாம்னுட்டார்” என்றான்.

“காப்பி கிடையாதா? எங்க வாத்தியார் கொடுத்துட்டாரே. நானும் போய் ஹெட்மாஸ்டரைக் கேட்கிறேன், இருடா” என்று அந்தப் பையன் ஓட்டமாய் ஓடினான்.

‘ஏ’ வகுப்புப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட வேலை தங்களுக்கு இல்லை என்றதில் மணிக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை அடக்க முடியவில்லை. தன் வகுப்புப் பிள்ளைகளிடம் ஓடி, “டேய், ஏ ஸெக்‌ஷனுக்குக் காப்பி உண்டாம்!” என்று சொல்லிக் குதித்தான்.

“டேய் மணி! லீவுக்கு எங்கேடா போகப் போறே நீ? நாங்கள் எல்லாம் குத்தாலத்துக்குப் போகிறோம்டா. எங்கப்பாவுக்கு ஒண்ணரை மாசம் லீவுடா” என்றான் ‘டில்லி’. பள்ளிக்கூடத்தில் அவனுக்கு ராமகிருஷ்ணன் என்று பெயர்.

“நாங்கள் சிதம்பரத்துக்குப் போகப் போறோம். எங்க அண்ணாவுக்குக் கல்யாணம்டா” என்றான் இன்னொருவன்.

மணி பலமாகத் தலையை அசைத்தான். “நாங்கள் எங்கேயும் போகப் போகிற தில்லை. என்னையும் எங்க அக்காவையும் லீவுக்குக் கோயம்புத்தூருக்கு அனுப்பப் போறேன்னு எங்க அப்பா சொல்லிண்டு இருந்தா. கோயம்புத்தூரிலே எங்க தாத்தா ஆம் இருக்கு. அதுக்குள்ளே எங்க மாமாவே இங்கே வரேன்னு எழுதிவிட்டான். அதனாலே நாங்க ஊருக்குப் போகப் போகிற தில்லை. எங்க மாமா வந்தான்னா ரொம்பத் தமாஷ்தாண்டா எங்களுக்கெல்லாம். அவன் ஸினிமாவிலே ஆக்ட் பண்ணியிருக்காண்டா!” என்று பெருமை தோன்றக் கூறினான்.

இந்தக் காலத்துப் பிள்ளைக்கு ஸினிமா என்றால் சொல்ல வேண்டுமா? “ஸினிமாவா? எந்த ஸினிமாவிலேடா? யாருடா அது?” என்று ஆவலுடன் எல்லாரும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

"'வெண்பூதம்' வந்ததே நீ பார்த்தயாடா? அதிலே கையிலே கத்தி வச்சிண்டு ராஜகுமாரத்தியோடே சண்டை போடறானே, அவன்தாண்டா எங்க மாமா. அப்புறம் 'ரத்தினக் கொடி'யிலே ஆக்ட் பண்ணி யிருக்கான். அப்புறம் 'அழுமூஞ்சி அண்ணுசாமி'யிலே கூட அவன் இருக்கானே!'

"ஓ, எனக்குக்கூட ஞாபகம் இருக்குடா. அழுமூஞ்சி அண்ணுசாமி அழறபோதெல்லாம் ஒத்தன் சிரிச்சிண்டே இருந்தானே அவன் தானேடா? வாயிலே முன் வரிசேலே ஒரு பல் இல்லேடா அவனுக்கு! அவன் தானுடா உங்க மாமா?"

மணியின் மனதுக்கு இது கேலியாகப் பட்டது. ஆகையால், சிரிக்காமல் அவன், "ஆமாண்டா, 'ரத்தினக் கொடி'யிலே ஆக்ட் பண்றபோது, கோட்டை மேலே யிருந்து கீழே குதிக்கிறபோது அடிபட்டுப் பல் விழுந்துடுத்தாண்டா" என்று கூறினான்.

அது பெரும் புளுகுதான். ஸினிமா நட்சத்திரமான மாஸ்டர் பஞ்சு அவர்கள் ஸினிமாவில் சேருவதற்கு யோக்கியதை உடையவராய் இருந்தது பல்லுப் போன காரணத்தினாலேதான். அவர் சிறு பிள்ளையா யிருக்கும் போதே எங்கேயோ இடறி விழுந்து தம் மூன் பற்களில் ஒன்றைப் பறி கொடுத்தார். அவர் பொக்கை வாய்ச் சிரிப்பைக் கண்டு ஜனங்கள் சிரிப்பார்கள் என்றே அவரை ஹாஸ்ய நடிகராக ஸினிமாவில் சேர்த்துக் கொண்டார்கள்.

"ஏண்டா, உங்க மாமா வந்தால் தினம் உங்களை ஸினிமாவுக்கு அழைச்சிண்டு போவாராடா?" என்றான் சுப்பு.

"ஆமாம். எங்க மாமா வந்தா காசில்லாமே வெறுமனயே டிக்கட்டு கிடைக்கும். எங்க மாமாவுக்கு எல்லா ஸினிமாக்காரரையும் தெரியுமே" என்று மணி பெருமை அடித்துக் கொண்டான்.

அப்பொழுது அவர்கள் எதிரே குடை பிடித்துக் கொண்டு வந்த பெண் ஒருத்தி, "அடே மணி! உங்களுக்கு எவ்வளவு நாள் லீவு?" என்று கேட்டாள்.


"பட்டு! உங்களுக்கும் அதுக்குள்ளே பள்ளிக்கூடம் விட்டுட்டாளா? எங்களுக்கு ஜூன் மாதம் 20-ம் தேதிதான் மறுபடி பள்ளிக்கூடம் திறக்கறா" என்றான் மணி.

பட்டு அவன் சகோதரி. அவனுக்கு மூத்தவள், வயது 14 இருக்கும். பெண் பாடசாலையில் நாலாவது பாரம் படித்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் தன் வகுப்பு சிநேகிதர்களை விட்டு விட்டு மணி அவளிடம் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டே நடந்தான். பாதி வழியில், "ஏண்டா மணி, சித்தப்பா ஆத்துக்குப் போய்விட்டுப் போகலாமாடா?" என்றாள் பட்டு. மணி சம்மதிக்கவே இருவரும் கமலாபாய் ரோட்டில் திரும்பி சாந்தி விஹாரில் நுழைந்து கதவைத் தட்டினார்கள்.

சுசீலா கதவைத் திறந்து? "நீங்களா? ஏண்டி பட்டு, பள்ளிக்கூடம் இல்லையா என்ன உங்களுக்கு?" என்று கேட்டாள்.

"இல்லை சித்தி! இன்னியோடே லீவ் விட்டுட்டா சித்தி. ஜூன் மாதம் இருபதாம் தேதிதான் இனிமே பள்ளிக்கூடம்."

சுசீலா அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். குழந்தை



கள் வெயிலில் வந்தார்களே என்று சமையல்காரனைக் கூப்பிட்டு அவர்களுக்கு எலிமிச்சம் பழ ஷர்பத் பண்ணிக் கொடுக்கும்படி உத்தரவிட்டாள்.

"அம்மாகூட இங்கே வரணும்னு சொல்லிண்டு இருந்தா. வந்தாலும் வருவா" என்றான் மணி.

"இன்னிக்கு வரமாட்டா சித்தி. ஆத்திலே அப்பளம் இடறா. பாதி உருண்டை அடுத்தாத்து அம்புஜ அம்மாமிகிட்டே கொடுத்திருக்கா. இன்னி முழுக்க அதுக்கே சரியாப் போயிடும்னு சொல்லிண்டு இருந்தா" என்றாள் பட்டு.

"ஏது! உங்க அம்மா ஒண்ணாட்டொரு நாள் அப்பளம் இடறாள் போலிருக்கே? உனக்கு இந்த வருஷம் கல்யாணம் பண்ணப் போறாளா என்ன?" என்றாள் சுசீலா.

பட்டு வெட்கத்துடன் பேசாமலிருந்தாள். மணி பட்டுவைப்போல் அல்ல.



மனதில் உள்ளதை யெல்லாம் அவன் வாயினால் கடகட வென்று கொட்டி விடுவான். பட்டு வார்த்தைகளை நிறுத்துத்தான் பேசுவாள். யோசனை செய்வதற்கு முன் ஒரு வார்த்தையும் அவள் வாயிலிருந்து வராது. சுசீலா மறுபடியும் இரண்டு தடவை தன் கேள்வியைக் கேட்ட பிறகே அவள் "கல்யாணமும் இல்லே, ஒண்ணுமில்லே சித்தி" என்றாள்.

உடனே மணி, "அம்மா கல்யாணம் பண்ணணும்னு தான் சொன்னா. அப்பா தான் கூடாதுன்னுட்டா. 'பதினஞ்சு வயசாகலே; இதுக்குள்ளே என்ன கல்யாணம்? இன்னும் இரண்டு வருஷம் போகட்டும் பார்த்துக்கலாம்'னுட்டா. ஏன் சித்தி, சித்தப்பா கல்யாணம் பண்ணிண்ட போது உனக்குப் பதினேழு வயசாமே?" என்றான்.

சுசீலா, பட்டுவின் வாயைக் கிளற வேண்டுமென்று அவளைப் பார்த்து "மாப்பிள்ளை யார்? வரன் பார்த்தாச்சோ?" என்று விசாரித்தாள்.

"வேறு யார்? பஞ்சு மாமா தான் மாப்பிள்ளை!" என்றான் மணி.

பட்டுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அதைப் பார்த்து சுசீலாவுக்கும் சிரிப்பு வந்தது. "பஞ்சு மாமாவா? அந்தக் கோமாளியா?" என்றாள் அவள்.

"இல்லே சித்தி. அவன் வெறுமனே எல்லாம் பொய் சொல்றான்."

"யாரடீ பொய் சொல்றா? அம்மா தானேடி சொன்னா?" என்றான் மணி.

"ஊம், சொல்லுவா, போடா! உனக்கு வேலையில்லே!"

"சரி, பேசாமல் இருங்கள், கல்யாணந்தான் இப்போ இல்லையே. இன்னும் இரண்டு வருஷம் கழித்துத்தானே; அப்போ பார்த்துக்கலாம். உங்க பஞ்சு மாமா எப்போ வரப்போறான்?" என்று சுசீலா பேச்சை மாற்றினாள்.


"எப்போ வரானோ தெரியாது. ஏன் சித்தி, நீ 'அழூஞ்சி அண்ணாசாமி' பார்த்தியா? அதிலே பஞ்சு வந்து—" என்று மணி ஆரம்பித்தான்.

"எல்லாம் பாத்தேன். பொம்மனாட்டி வேஷம் போட்டுண்டு பொக்கைப் பல்லைக் காட்டிக் கொண்டு நின்றானே, பேஷாய் இருந்தது!"

பட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

மணி வெட்கமடைந்து, "கேரம் ஆடலாம் வரயா?" என்று கேட்டுவிட்டு, கேரம் போர்டைத் தூக்கிக் கொண்டு வந்தான். (தொடரும்)

ஸீல் ஆனது



காற்று நுழையாதது

சிறந்ததை விரும்பும்

அந்தச் சிலருக்கு மட்டும்

நறுமணம் கமழும் சிகரெட்டை விரும்புவோர் டிலக்ஸ் டெனரை வரவேற்பார்கள். 'உலகில் சுகத்தின் எல்லை இதுவே' என்று இதன் நறுமணம் கருதப்படுகிறது. உத்தரவாதமுள்ள 100% பொருக்கின வர்ஜீனியா புகையிலையென்ருல் அது சாதாரண உத்தரவாதமல்ல.

பெரிய அல்லது ஸ்டாண்டர்டு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்.

BY APPOINTMENT TO THE MOST HONOURABLE THE MARQUESS OF LINLITHGOW, VICEROY AND GOVERNOR GENERAL OF INDIA

TENOR

de luxe CIGARETTES

Guaranteed 100% Pure Virginia Tobacco

உங்களது உத்தரவாதம்

டி லக்ஸ் டெனர் சிகரெட்ஸ்

ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

EASTERN LICENCEES — P. B. NO 9029 — CALCUTTA.

T-8 AC



காலக்ஷேபம்

தெரிந்த விஷயம்

தகப்பனார் :—டேய் கோபாலா ! நான் கேட்ட கேள்விகளுக்கு நீ சரியான பதில் சொல்லவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது ?

கோபாலன் :—நீங்கள் சரியான கேள்விகள் கேட்கவில்லை என்று தெரிகிறது ! —ஏ. சேதுராமன்.

* * *

சரியான யோசனை !

பண்ணை முதலாளி ஒருவர், தன் சிநேகிதரைப் பார்த்து.

"ஏன் சார், நாங்கள் எல்லாரும் மாட்டுக்குப் புல் அகப்படாமல் கஷ்டப் படுகிறோமே, அப்படியிருந்தும், உங்கள் வீட்டுப் பசு நன்றாக வளர்ந்திருக்கிறதே! அது ஏன் ?"

சிநேகிதர் :—" இது தெரியாதா உங்களுக்கு? எங்க பசுவுக்கு பச்சைக் கண்ணாடி ஒன்று வாங்கி மாட்டிவிட்டேன். அதிலிருந்து, வைக்கோலை யெல்லாம், புல் என்று எண்ணிக் கொண்டு, ஜமாய்த்துத் தள்ளிவிடுகிறது போங்கள்." —வி. கே. முத்தையா.

* * *

பார்த்துவிட்டான் !

முதல் பைத்தியம் (இடெரன்று கையை மூடிக் கொண்டு இரண்டாவது பைத்தியத்தைப் பார்த்து) :—ஏய்! என் கையில் என்ன இருக்கின்றது ?

இரண்டாவது பைத்தியம்:—ஏரோப்பிளேன்டா !

முதல் பைத்தியம் :—போடா, நான் கையை மூடும் பொழுது பார்த்து விட்டேடா !

—எம். என். பட்டாபிராமன்.

* * *

நாலாவதுதான் !

மாஜிஸ்ட்ரேட் (ஒரு ஆள் மேல் காரை ஓட்டிய மோட்டார் ஓட்டியைப் பார்த்து) :—இதோடு இந்த வருடத்தில் ஐந்தாவது ஆள் மேல் காரை ஓட்டியிருக்கிறாயல்லவா ?

மோட்டார் ஓட்டி :—மன்னிக்கவும், இது நாலாவது ஆள்தான். ஏனெனில் இவர்களில் ஒருவர் மேல் இரண்டு தடவை ஓட்டியிருக்கிறேன்.

—த. ராமசுப்ரமணியன்.

பரிசெடுத்தவன் !

"தெரியுமா உனக்கு ? காலேஜ் தினத்தன்று போட்டிகள் நடந்ததே. அதிலே எல்லா பரிசுகளையும் ஒருவனே அடித்துக் கொண்டு போய்விட்டான் !"

"அப்படியா ? அவன் பலே கெட்டிக்காரனாயிருக்கவேண்டுமே ? அவன் இப்போது எந்தக் கிளாஸில் இருக்கிறான் ?"

"ரொம்ப கெட்டிக்காரன் தான். ஆனால் ஒரு கான்ஸ்டேபின் அவனையும் ஜயித்து விட்டான். இப்போது அவனை 'ஸி' கிளாஸிலே ஆறுமாதம் போட்டிருக்கிறார்கள்."

—கே. நாகராஜன்.

* * *

நல்ல வழி !

தகப்பனார் :—டேய் ராமு, கோபு பரீட்சையில் ஒரு கேள்விக்கும் பதில் எழுதலேன்னு உனக்கு என்னமாடா தெரியும் ?

ராமு :—நான் எழுதாத கேள்விக்கெல்லாம் என்ன பதில் எழுதி இருக்கேன்னு அவனை கேட்டேன், அப்பொ தெரிஞ்சுது .... !


—பி. ஆர் கிருஷ்ணன்.

* * *

அற்ப விஷயம்

ஜெயில் விஸிடர் :—ஏண்டாப்பா நீ ஜெயிலில் இருக்கிறாய் ?

கைதி :—ஒரு கயிறு எடுத்ததற்காக...



ஜெ. விஸிடர் :—என்ன, ஒரு கயிறு எடுத்ததற்காகவா ஜெயில் தண்டனை ?

கைதி :—இல்லிங்க, அந்தக் கயிற்று நுனியில் ஒரு மாடு கட்டியிருந்ததுங்க.

—பி. சாரதா.

தமிழ் வளர்ந்த கதை

ஸ்ரீ

(முற்காலம்)

1. தமிழ் முனிவர்

ராவணன் லங்கையைப் பிடித்துக் கொள்வதற்கு முன் தமிழ்நாட்டை ஆக்கிரமித்து ஆட்சி செலுத்தி வந்தானும். அந்த ஆட்சியால் தமிழ் மக்களுக்கு நேர்ந்த துன்பத்தைப் போக்க விரும்பிய அகஸ்திய முனிவர், இந்த நாட்டை விட்டு ராவணன் போக வேண்டுமென்று தீர்மானித்தார். அபூர்வமான ஒரு யோசனை தோன்றியது முனிவருக்கு. அதன் பயனாக, அவர் ராமனைப்போல் ராவணனோடு போர் செய்யவில்லை; ஒரு அம்பு போடாமல், ஒரு துளி இரத்தம் சிந்தாமல் வெற்றி யடைய விரும்பினார்.

சங்கீதப் போர்

அஹிம்ஸா தர்ம முறையிலும் அது ஓர் அதிசய வெற்றி. ராவணன் கொடுங்கோலன்; துஷ்ட ராட்சஸன்: எனினும் சங்கீதம் என்றால் காதைப் பொத்திக் கொண்டு சங்கீத சாஸ்வதியையும் பயமுறுத்தும் சர்வாதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவன் அல்லன். ராவணன் சங்கீதத்திலே தேர்ச்சி பெற்றவன். எனவே அவனை அகஸ்தியர், "சங்கீதப் போட்டி போட நான் இருக்கும் பொதிய மலைக்கு வா" என்று அழைத்தாராம். பிறகு "இந்தப் போரில் நீ தோற்றுப் போனால் இந்த நாட்டை விட்டுப் போய்விட வேண்டும்!" என்று ஒப்பந்தம் செய்து கொண்டாராம். அந்தச் சங்கீதப் போரை அகஸ்தியர் ஒரு புதிய முறையிலே நடத்துவதென்று தீர்மானித்திருந்தார்.

மிகவும் உருக்கமாய்ப் பாடக் கூடிய ஒரு சங்கீத நிபுணரைக் குறித்து "அவர் கல்லும் உருகப் பாடுவார்!" என்று ரஸிகர்கள் உபசாரமாய்ச் சொல்லுகிறார்களல்லவா? அகஸ்தியரோ, "உண்மையாகவே கல் உருகப் பாட வேணும். நமக்குள் அப்படிப் பாடுகிறவருக்கே இந்தப் போரில் வெற்றி; இந்தப் பொதிய மலைக் கல்லை உருகச் செய்யாதவருக்குத் தோல்வி!" என்று உறுதியாகச் சொன்னாராம். "ஓஹோ, * குறுமுனியின் குறும்பு இது!" என்று எண்ணிக்கொண்டே ராவணனும் குறும்பாக, "முனிவரே! முதலில் தாங்களே பாட வேணும்" என்று வேண்டிக் கொண்டான். 'சரி'யென்று முனிவர் பாடவே, மலைக் கல் உருகிற்று! பிறகு ராவணன் பாடினபோது, உருகி யிருந்தது இறுகிக் கல் முன்போலவே கல்லாகி விட்டதாம். "இப்படியும் ஒரு சங்கீதமா?" என்று பிரமித்துப் போன ராவணன், தன் தோல்வியை ஒப்புக்கொண்டு தமிழ்

*குறுமுனி: அகஸ்தியர்



மாணுக்கர் புடை சூழ அகஸ்திய முனிவர்.
(காஞ்சீபுரம் கைலாஸநாதர் கோவிலில்)

நாட்டை விட்டு லங்கைக்குப் போய் விட்டானும்.

ராமாயணத்தில் இல்லாத—வால்மீகி முனிவர் சொல்லாத—நிகழ்ச்சிதான்! எனினும் தமிழ்நாட்டிலே தமிழ் முனிவர் நடத்திய இந்த விநோதப் போருக்குத் தமிழர்கள் சாட்சி சொல்லுகிறார்கள். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்ற இரண்டு பெரிய உரையாசிரியர்களும் சொல்லுகிறார்கள்; பொய்யா மொழிப் புலவர் முதலான புலவர்களும் சாட்சி சொல்லுகிறார்கள். அவர்களுக்கும், தற்காலத் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் கூட "அகஸ்தியருடைய இசைத்தமிழே துஷ்ட ராவணனை ஜயித்துச் சாந்தப்படுத்திச் சத்தியத்திற்கும் கட்டுப்படும்படி செய்து விட்டது!"—என்ற விஷயத்தில் சந்தேகமே கிடையாது.

முத்தமிழ் முனிவர்

தமிழ் முனிவராகிய அகஸ்தியர் இலக்கியத் தமிழாகிய இயல்-தமிழில் மட்டுமா வல்லவர்? ராக தாளங்களோடு இசைந்த இசைத் தமிழிலும் நாடகத் தமிழிலும் கூட வல்லவர்—என்பது நம் முன்னோர் அபிப்பிராயம். அவர்கள் இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் சேர்ந்த முத்தமிழ்க் கல்வியை முழுக் கல்வியாக மதித்தார்கள். இம் முழுக் கல்வியிலும் சிறந்து விளங்கிய அகஸ்தியர் முத்தமிழுக்கும் இலக்கணம் செய்தார் என்று சொல்கிறார்கள். 'முத்தமிழ் மாமுனி' என்று நமது தேசிய கவி பாரதியாரும் பாடுகிறாரல்லவா?

அகஸ்தியரைத் தமிழில் அகத்தியர் என்பதால், அகஸ்தியர் செய்த தமிழிலக்கண நூலுக்கு அகத்தியம் என்று பெயர் வந்தது. இது இயல், இசை, நாடகம் என்னும் மூன்று இலக்கணங்களும் உடையதாய்த் தமிழுக்கு விளக்காக விளங்கிக் கொண்டிருந்ததாம் அக்காலில்.

தமிழ் நாட்டில் பழைய காலத்திலே மூன்று சங்கங்கள் இருந்தனவாம். தமிழை முத்தமிழ் என்பதுபோல், இச்சங்கங்களையும் முச்சங்கங்கள் என்கிறார்கள். முதலாவது சங்கம் முதற் சங்கம் அல்லது தலைச் சங்கம் என்று சொல்லப்படுகிறது. மூன்றாவது சங்கம் கடைசிச் சங்கமானதால், அதைக் கடைச் சங்கம் என்கிறார்கள். இந்த இரண்டு சங்கங்களுக்கும் இடையிலே யிருந்தது இடைச் சங்கம். இந்த மூன்று சங்கங்களுக்கும் அகத்தியம் இலக்கணமா யிருந்ததாம். முதல் இரண்டு சங்கங்களிலும் அகஸ்தியர் கலந்து கொண்டு முத்தமிழாராய்ச்சியும் செய்து வந்தார் என்றும் சொல்லுகிறார்கள்.

உண்மையில், அகஸ்திய முனிவர் தமிழரசனாகிய பாண்டியனுதவியால் அவனுடைய தலைநகரில் ஏதாவதொரு தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தி யிருக்கக்கூடும். பாண்டியனை அகஸ்திய சிஷ்யனென்றும், அகஸ்தியரைப் பாண்டியனுக்குப் புரோகிதரென்றும் சொல்வதுண்டு.

'கடல் கொள்ளப்பட்ட தென் மதுரை'யில் முதற் சங்கம் இருந்ததென்று சொல்லுகிறார்கள். அந்த மதுரையைக் கடல் பொங்கி அழித்துவிட்டதற்குப் பின் அதன் பெயரை வைத்துப் பாண்டிய மன்னன் ஏற்படுத்திய புதிய தலைநகரம் தானும் இப்போதுள்ள பழமையான மதுரைமா நகரம். இதனால் அகஸ்தியர் காலமும் முதற் சங்க காலமும் சரித்திர ஆராய்ச்சிக்கு எட்டாத ஒரு பழங் காலமா யிருக்க வேண்டும்—என்று ஊகிக்கிறார்கள்.

பார்வதி-பரமேச்வரர்களின் திருக்கல்யாண காலத்திலே, அந்தக் கல்யாண மகோத்ஸவத்தைப் பாராமலும், கல்யாண விருந்தைச் சாப்பிடாமலும் அவ்வளவு அவசரமாக அகஸ்தியர் தெற்கே பொதிய மலைக்கு ஓடி வந்துவிட்டார் என்ற கதையும், அகஸ்தியர்-காலம் சரித்திரத்திற்கு எட்டாத தொன்மை வாய்ந்தது என்பதைப் புராண பாஷையிலே வெளியிடுகிறது.

வடக்கே இமய மலையிலிருந்து தென்னாட்டிற்கு வரும்போது அகஸ்தியர், "தென் பூமி தமிழ்ப் பூமி என்கிறார்களே: அந்த ஜனங்களோடு நான் பாஷை தெரியாமல் எப்படிப் பழகுவேன்?" என்று சிவபெருமானைக்

கேட்டாராம். உடனே அப் பெருமான் அகஸ்தியருக்குத் தமிழ் கற்பித்தாராம். ஆகையால் பரமசிவனே தமிழுக்குப் பரமாசாரியன் என்கிறார்கள். சிவ குமாரரான முருகக் கடவுள் தான் அகஸ்தியர் 'அக மகிழச் செவி குளிர'த் தமிழை அவருக்குக் கற்பித்தாரென்றும், முருகனே செந்தமிழ்ப் பரமாசாரியரென்றும் சொல்வதுமுண்டு. பௌத்தர்களோ, அவலோகிதன் என்ற ஒரு பௌத்த ஞானி பொதிய மலையில் இருந்ததாகவும், அவரே அகஸ்தியருக்குத் தமிழ் கற்பித்ததாகவும் சொல்லுகிறார்கள்.

இந்தக் கதைகளெல்லாம் பழைய வேதரிஷியான அகஸ்தியர் காலத்திற்கும் முன்பே தமிழ் இருந்ததென்பதை ஞாபகப் படுத்துகின்றன. ஆதி வேதமாகிய ரிக் வேதத்தில் சில மந்திரங்களை இயற்றிய அகஸ்திய மகரிஷிதான் தமிழ்நாட்டை ஸ்வீகார பூமியாக்கிக் கொண்டு தமிழ் முனிவராகித் தமிழர்களுடைய பேச்சு, பாட்டு, நூல்கள் முதலியவற்றை அறிந்து ஆராய்ந்து அகத்தியம் என்ற முத்தமிழ் இலக்கணத்தை இயற்றினார் என்கிறார்கள்.

அகஸ்தியர் இயற்றிய இலக்கணம் வெகு காலத்துக்கு முன்பே வழங்காமல் போய் விட்டது. எனினும், அகஸ்தியர் 'என்றும் உள தென் தமிழ்'போல் என்றும் உள்ளவர் தான்! . தமிழர்களின் உள்ளம் புகுந்து வளர்ந்து வளர்ந்து எவ்வளவோ வியாபகமும் அடைந்து விட்டார்! சைவ வைஷ்ணவர்கள் மட்டுமல்ல; ஜைன பௌத்தர்களும் தமிழ் முனிவரை மறக்கவேயில்லை. தமிழையே அகஸ்திய புத்திரி ('அகஸ்தியன் *பயந்த செஞ்சொல் †ஆரணங்கு') என்றார்கள். எத்தனையோ வைத்திய நூல்களையும், சோதிட நூல்களையுங்கூட இவர் தலைக் கமையாகத் ஆக்கி வைத்தார்கள். அகஸ்தியர் சிவபெருமானிடம் ஆகமங்களும் பெற்று வந்தாராம். இந்த முத்தமிழ் முனிவரைச் சைவர்கள் 'சிவ குரு' என்றும் போற்றுகிறார்கள்.

அகஸ்தியர் பெயரை மலயத்வீபங்கள் முதலான வெளி நாடுகளிலும் விளங்கச் செய்தார்கள் தமிழர்கள்.

இமய மலைக் காட்சிக்கு அடுத்தபடியாக ஆத்ம எழுச்சியும் ஞான விளக்கமும் அளிக்க வல்லது மேற்கு மலைத் தொடர்ச்சியின் காட்சிதான். இந்த மலைத் தொடரைச் சேர்ந்தது பொதிய மலை. இம் மலையை ஒரு தமிழ்ப் புலவர்,

---

*பயந்த : பெற்ற. † ஆரணங்கு : பெண்.

திங்கள்முடி சூடுமலை ;
        தென்றல்விளை யாடுமலை ;
தங்குமுகில் சூழுமலை ;
        தமிழ்முனிவன் வாழுமலை ;
அங்கயற்கண் அம்மைதிரு
        அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை ;
        பொதியமலை என்மலையே

[திங்கள் : சந்திரன். முகில் : மேகம். அங்கயற் கண் அம்மை : பார்வதி தேவி. பொங்கருவி : பொங்குகிற அருவி.]

என்று ஒரு குறப் பெண் பாடுவதாகப் பாடியிருக்கிறார்.

இந்தப் பொதிய மலையில் வசதியாக ஆச்ரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்த அகஸ்தியர் வட மொழியும் தமிழ்மொழியும், கூடிக் குலாவி வாழச் செய்தார். மாணாக்கர்களுக்குப் பாடம் சொன்னார்; சங்கம் வளர்த்தார்; இலக்கணம் செய்தார். இயல்-தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் ஆகிய முத்தமிழையும் ஒருங்கே ஆராய்ந்தார்; விசேஷமாக, இசைத் தமிழில் நிபுணராகவும் பரம ரஸிகராகவும் விளங்கினார். அகத்தியம் என்ற தமிழ் விளக்கு அணைந்து போய்விட்டாலும், அகஸ்தியர் 'கோட்டும் மலை மேல் ஏற்றி வைத்த வாடாத மணி விளக்காக எத்தனையோ உள்ளங்களில் விளங்கிக் கொண்டிருக்கிறார்!

அதே ரயில்தான்!



உபாத்தியாயர் :—கோபு, ரயில் பிரயாணத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறாயே, அது கிட்டு எழுதியதைப் போலவே இருக்கிறதே! கொஞ்சங்கூட வித்தியாச மில்லாமல் எப்படி எழுதினாய்?

கோபு :—கிட்டு பிரயாணம் செய்த அதே ரயிலில்தான் நானும் பிரயாணம் செய்தேன். அதனால்தான் கட்டுரை ஒரேமாதிரி யிருக்கிறது.

பஸ் இன்ஸ்பெக்டர்

"வஸந்தன்"

"பூம்!" "பூம்!" என்று தெருக் கோடியில் மோட்டார் ஹாரன் சப்தம் கேட்டதும், வீட்டில் எங்கேயிருந்தாலும் போட்டது போட்ட வாக்கில் போட்டு விட்டு வாசலுக்கு ஓடி வந்துவிடுவாள் சண்பகம். அந்த பஸ்ஸில் தான் கவனிக்க வேண்டிய மனிதர் இருக்கிறாரா என்று அவளது அகன்ற கண்கள் ஒருகண நேரம் தேடி அலையும். அந்த உருவம் கண்ணில் பட்டதும் அவள் புளகாங்கித மடைவாள். தூரத்தில் கார் மறைகிற வரையில் அதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு வேலையைப் பார்க்கப் போவாள் சண்பகம்.

இந்த மாதிரி, ஒரு நாளைக்கு நாலு தடவை பஸ் போகிற சமயங்களிலெல்லாம் சண்பகம் வாசலுக்கு வருவாள்! அவள் எதற்காக அப்படி ஓடி வருகிறாள், யாரைப் பார்ப்பதற்காக ஓடி வருகிறாள் என்பது ஒருவருக்கும் தெரியாது. உண்மையில், அவள் யாரைப் பார்க்க வருகிறாளோ அந்த பஸ் இன்ஸ்பெக்டருக்குக் கூடத் தெரியாது!

சண்பகம், கிராமத்திலிருந்த தன் தூர பந்துவான மார்த்தாண்டம் பிள்ளை வீட்டுக்கு வந்து ஒரு வருஷந்தான் ஆகியிருந்தது. அதற்கு முன்னால் அவளும் உலகத்தாரைப் போலவே சந்தோஷமாக இருந்தாள். அவளும் வீட்டில் மிகவும் செல்லப் பிள்ளையாக அருமையாக வளர்ந்து வந்தாள். ஆனால் திடீரென்று சனியன் பிடித்துக் கொண்டது. ஒரே வருஷத்தில் தாய் தகப்பனைப் பலி கொடுத்து விட்டு அனாதையாக நிற்கவேண்டி வந்ததென்றால் சனியன் பிடித்துக் கொண்டது என்றுதானே சொல்ல வேண்டும்? சண்பகத்தின் நிர்க்கதியைப் பார்த்து விட்டு அவளது தூர பந்துவான மார்த்தாண்டம் பிள்ளை அவளைக் கிராமத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தார். "நல்ல பிள்ளையாகப் பார்த்து சண்பகத்திற்குக் கட்டி விட வேண்டும். அதற்குப் பிறகு விட்டது கவலை!" என்று மார்த்தாண்டம் பிள்ளை கூறி வந்தார்.

ஆனால், மார்த்தாண்டம் பிள்ளையைப் போல் எல்லோரும் நல்லவர்களாக இருந்து விட்டால் அப்புறம் உலகம் என்ன கதியாகிறது? அவர் மனைவி சிவகாமி அம்மாளும் அவரது சகோதரிகளும் சண்பகத்திற்கு வேலைக்காரிக்கு மேற்பட்ட வேறு எந்த அந்தஸ்தையும் கொடுக்க மறந்து விட்டார்கள். நாள் முழுதும் வேலை செய்து அலுத்துப் போன சண்பகத்திற்குக் கூட உத்சாகமும் உள்ளக் கிளர்ச்சியும் பொங்கும் ஒன்றிரண்டு நிமிஷங்கள் கிடைக்காமல் போய்விடவில்லை. "பூம்! பூம்!" என்று வாசலில் மோட்டார் ஹாரன் சத்தம் கேட்கிறதல்லவா, அப்பொழுது அவள் மார்பு விம்மும், உடம்பில் புல்லரிப்பு உண்டாகும். வாசலில் போய் நின்று வேடிக்கை பார்க்கும் போது அவளுக்கு எவ்வளவு ஆவல்! எவ்வளவு குதூகலம்!

நான்கு மாதங்களுக்கு முன் தஞ்சையிலிருந்து பஸ்ஸில் வரும்போதுதான் சண்பகம் முதல் முதலாக பஸ் இன்ஸ்பெக்டர் வையாபுரியைப் பார்த்தது. வையாபுரியின் முகத்தில் ஒரு கவர்ச்சி இருந்தது. அந்தக் கவர்ச்சியான முகத்தை அதற்குப் பிறகு சண்பகத்தால் மறக்க முடியவில்லை.

• • •

அன்று காலையில் சண்பகம் தெருவில் கோலம் போட்டுக் கொண்டு நின்றபோதுதான் அந்த முக்கிய சம்பவம் நடந்தது. திடீரென்று ரோடில் மோட்டார் வரும் சத்தம் கேட்டது. சண்பகம் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் பஸ்ஸில் உட்கார்ந்து கொண்டிருந்த இன்ஸ்பெக்டரைச் சந்தித்தன. தூரத்திலேயே அவன் ஒரு பெண் கோலம் போட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தான். கார் அருகில் வந்ததும், அந்தப் பெண் அப்படி முறைத்துப் பார்ப்பானேன் என்பது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அவள் கரிய விழிகள் தன் கண்ணைச் சந்தித்து, இரு வினாடி அப்படியே நிலைத்து நின்றதைப் பார்த்ததும், அவள் தன்னைத்தான் கவனிக்கிறாள் என்பது வையாபுரிக்குச் சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரிந்து போயிற்று.

• • •

வையாபுரி தஞ்சாவூரைப் பார்க்க மோட்டாரில் போய்க் கொண்டிருந்தவன் அன்று அந்தக் கிராமத்தில் மோட்டாரை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கிக் கொண்

டான். எப்படியாவது அன்று அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசிவிடுவது என்று அவன் தீர்மானம்செய்து கொண்டுதான் இறங்கினான்.

அப்படி அவன் தீர்மானம் செய்துகொள்ளு முன், சண்பகத்தைப் பற்றிய சில ஸ்வாரஸ்யமான தகவல்களை விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தான். அந்த அனாதைப் பெண் சண்பகம் மார்த்தாண்டம் பிள்ளை வீட்டில் படுகிற பாடு அந்தக் கிராமத்தில் மிகவும் பிரசித்தமாகியிருந்தது. ஆகையால் வையாபுரியின் காதில் அந்த சமாசாரம் எல்லாம் விழவே, அந்தப் பெண்ணின் மேல் அவனுக்கு அளவிலாத பச்சாதாபம் உண்டாயிற்று.

சாயங்காலம் தினமும் தென்னந்தோப்பில் இருந்த தாமரைக் குளத்துக்கு சண்பகம் போவதை வையாபுரி சில நாட்களாகக் கவனித்துக் கொண்டிருந்தான். ஆகவே, அவன் இறங்கின இடம் அந்தத் தோப்பிற்கு அருகில்தான் இருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

அப்பொழுதுதான் தூரத்தில் ஒரு பெண் உருவம் மங்கலாகப் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. வையாபுரி ஒற்றையடிப் பாதையை நோக்கி நடந்து போனான். எங்கும் ஜன நாட்டமே இல்லை. வையாபுரி குளத்தங்கரையை அடைந்த சமயமும் சண்பகம் தண்ணீரை மொண்டு திரும்பி வந்ததும் சரியாக இருந்தது. திடீரென்று தன் எதிரே நின்ற வையாபுரியைப் பார்த்ததும் சண்பகத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் கையில் இருந்த குடம் கீழே நழுவி விழுந்து உருண்டு ஓடிற்று.

வையாபுரி நிதானமாகக் கீழே விழுந்த குடத்தை எடுத்தான். வாய் பேச முடியாமல் திகைத்து நின்ற சண்பகத்தை அங்கேயே விட்டு விட்டு, ‘விரு விரு'வென்று குளத்திற்குப் போய்த் தண்ணீரை மொண்டு கொண்டு வந்து நின்றான்! சண்பகத்திற்கு அப்பொழுது தான் பேச முடிந்தது.

“ஆமாம்; நீங்கள் என்னத்திற்காகத் தண்ணீர் கொண்டு வந்தீர்கள்?" என்று சண்பகம் கேட்டாள்.

“பிறருக்கு உதவி செய்கிறது என்றால் எனக்கு ரொம்பவும் பிரியம். நீ கலங்கிப் போய்க் குடத்தைப் போட்டதும், நான் தண்ணீர் கொண்டு வராமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் உலகத்தார் என்னை ஏசமாட்டார்களா?"

சண்பகம் முகத்தில் புன்னகை அரும்பிற்று. ஆனால் வாய் திறந்து பேசமுடியவில்லை.

“ஆமாம், எதற்காகத் தினம் என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்று ஆரம்பித்தான் வையாபுரி.

“நானா? இல்லையே! நான் உங்களை ஏன் பார்க்கிறேன்? எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது!" என்றாள் சண்பகம்.

“நிஜமாக என்னைப் பார்க்கவில்லையா?"

“நிச்சயமாக இல்லை."

“வாஸ்தவமாக?"

“ஊஹூம்."

“அதைத் தெரிந்து கொண்டு போவதற்காகத்தான் வந்தேன். ஏதாவது உனக்கு உதவி செய்ய முடியுமா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் வந்தேன்" என்று சொல்லிக் கொண்டே திரும்பினான் வையாபுரி. சண்பகம் அவன் சோகக் கண்களைப் பார்த்தாள்.

“ஆமாம்!........." என்று ஏதோ பேச வந்தவள் சட்டென்று நிறுத்தினாள்.

“நீங்கள் யார்?..............." என்று கேட்டாள்.



"அதெல்லாம் பெருக்கல் வாய்ப்பாடு அல்ல, உடனே பதில் சொல்கிறதற்கு? சாவகாசமாகத்தான் சொல்லவேண்டும். உன்னோடு வீட்டிற்கு வந்து சொல்லட்டுமா?"

"அவ்வளவு சீக்கிரமாக 'உதவி' செய்ய ஆரம்பித்துவிடாதீர்கள். மாமா, அத்தை— எல்லாரும் வீட்டில்தான் இருக்கிறார்கள். உங்களை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் போனால், நம்மைப் பாராட்டக்கூடிய நல்ல தனம் அவர்களுக்குக் கிடையாது!" என்றாள்.

திடீரென்று சண்பகம் எதையோ நினைத்துக் கொண்டாள். "நாளைக்கு எல்லாரும் திருவாரூர் போகிறார்கள். மாமா மட்டிலும் தான் வீட்டில் இருப்பார். சாயங்காலம் அவரும் கோவிலுக்குப் போய்விடுவார்...... நீங்கள்........." என்றாள் சண்பகம். வையாபுரி அடுத்தாற்போல் என்ன செய்கிறதென்று 'பிளான்' போட்டு விட்டான்.

• • •

படு வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் காரிலிருந்து இறங்குவது கூட வையாபுரிக்குச் சுலபமாயிருந்தது. ஆனால் மறு நாள் இரவு எழரை மணிக்குச் சத்தப் படுத்தாமல் மார்த்தாண்டம் பிள்ளை வீட்டுத் தோட்டத்துக்குள் பிரவேசிப்பது மட்டும் அவனுக்குப் பிரும்மப் பிரயத்தனமாகி விட்டது. சண்பகத்தை அன்று சந்தித்து, அவன் கூறிய



வரலாற்றைக் கேட்டதும், "இப்படியும் ஒரு அநாதை உண்டா?" என்று வையாபுரி துயரப்பட்டான். அவன் தன் வரலாற்றையும் சண்பகத்திடம் சொல்லாமல் விடவில்லை. இரண்டு வருஷங்களுக்குமுன் சண்பகத்தைப் பிடித்துக் கொண்ட துரதிருஷ்டம் இருபது வருஷமாக வையாபுரியைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருப்பதைக் கேட்டதும், "நான் ராணி!" என்று கூட சண்பகத்திற்குத் தோன்றி விட்டது.

'ஜல்' 'ஜல்'லென்று தூரத்தில் மாட்டு வண்டிச் சத்தம் கேட்டதும் "மாமா வருகிறார்!" என்று கூவினாள் சண்பகம். வையாபுரி அவசரமாகக் கிளம்பினான். "இருட்டாயிருக்கிறது! பார்த்துப் போங்கள்" என்று எச்சரித்தாள். அவன் போய்க்கொண்டிருந்த இடம் இருட்டாகத்தான் இருந்தது. வையாபுரி கையால் சுவரைத் தடவிக்கொண்டே பின் பக்கத்தை நோக்கிச் சென்றான். 'படீர்' என்று சத்தம் கேட்டது.

"என்ன? கீழே என்ன விழுந்தது?" என்று கேட்டுக்கொண்டே அரிக்கன் லாந்தரை எடுத்துக்கொண்டு ஓடி வந்தாள் சண்பகம்.

'ஜல்' 'ஜல்' என்ற சத்தம் நெருங்கி வந்துவிட்டது! சுவரைக் கையால் தடவிக் கொண்டே வந்தபோது வையாபுரியின் கை ஒரு படத்தின் மேல் படவே, அது நழுவிக் கீழே விழுந்துவிட்டது. "ஐயோ! குமாருவின் படமல்லவா?" என்று அலறினாள் சண்பகம். "பதறாதே! நான் நாளைக்கு வரும்போது அதற்குக் கண்ணாடி போட்டுக் கொண்டு வந்துவிடுகிறேன். இருந்த இடத்தில் வைத்துவிடலாம். ஆனால் கண்ணாடித் தூள்களை மட்டும் வெளியில் எடுத்து எறிந்து விடு" என்று சொல்லி உடைந்த படத்தை எடுத்துக்கொண்டு வேகமாகப் போய் விட்டான் வையாபுரி.

'ஜல்' 'ஜல்'லென்ற சத்தம் வாசலில் வந்து நின்றது. சண்பகம் இடத்தைச் சுத்தம் செய்து முடித்தபோது, மார்த்தாண்டம் பிள்ளை "சண்பகம்!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தார்.

சண்பகம் மனம் 'திக்' 'திக்'கென்று அடித்துக்கொண்டது. நாளைக்குப் பொழுது விடிந்ததும் மாமா, "முத்துக்குமாருவின் படம் எங்கே?" என்று கேட்டுவிட்டால் என்ன செய்கிறது? ஆனால், மாமா எங்கே அவ்வளவு தூரம் கவனிக்கப் போகிறார்? நல்ல வேளையாக, அத்தை வீட்டில் இல்லை

என்று நினைத்தபோது அவளுக்குச் சந்தோஷமும் ஏற்பட்டது. ஏனென்றால் அத்தைதான் அந்தப் படத்தை அடிக்கடி பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பாள். தன் ஒரே பிள்ளையான முத்துக்குமாருவின் படத்தை வெள்ளி 'ப்ரேம்' போட்டு வைத்து, வருகிறவர்களுக்கெல்லாம் காண்பித்துக் கொண்டிருப்பாள். முத்துக்குமாரு அப்பொழுது காசி சர்வ கலாசாலையில் உயர்தரப் படிப்புக்காகச் சென்றிருப்பதைப்பற்றிப் பெருமையுடன் சொல்லிக் கொள்வாள்.

* * *

மறு நாள் மாலை எப்பொழுது வரும், வரும் என்று காத்துக் கொண்டிருந்தாள் சண்பகம். ஆனால் மறு நாள் காலை அவள் கொஞ்சமும் எதிர்பார்த்திராத சம்பவம் நடந்தது. மார்த்தாண்டம் பிள்ளை சண்பகத்தைக் கூப்பிட்டு, "குழந்தைகள் எல்லாம் உன்னைக் காணாமல் அழுகிறதுகளாம். வண்டியைக் கட்டச் சொல்லியிருக்கிறேன். நீயும் திருவாரூருக்குப் போய்விட்டு அத்தை, குழந்தைகளோடு திரும்பி வந்துவிடலாம். புறப்படு!" என்று கட்டளை யிட்டார்.

சண்பகம் வண்டியில் போய்க்கொண்டிருந்தபோது ஒவ்வொரு பல்லாகப் பார்த்துக் கொண்டே போனாள். அவளுக்கு என்ன செய்கிறது என்றே தோன்றவில்லை. "அவர் இன்று வந்து பார்த்து விட்டு என்னைக் காணாமல் திரும்பிப் போவார். அதற்கென்ன? நாலு நாள் கழித்துத் திரும்பி வந்ததும் எப்படியாவது பார்த்துப் படத்தை வாங்கிக் கொண்டால் போகிறது!" என்று சமாதானம் செய்து கொண்டாள்.

* * *

வையாபுரி அன்று இரவு நேரத்தில் மார்த்தாண்டம் பிள்ளையின் தோட்டத்துக்குள் பிரவேசித்தான். வீட்டின் பின்புறம் காலடி எடுத்து வைத்ததும், கூடத்தில் பிள்ளை உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் நின்றுவிட்டான். இதே சமயத்தில் பிள்ளை பின்புறமிருந்து ஏதோ சத்தம் வருவதைக் கேட்டு, அங்கே வந்தார். வையாபுரி காலைக் காகப் பின்வாங்க ஆரம்பித்தான். "யாரது?" என்று கனத்த குரலில் கேட்டார். பதில் வரவில்லை. வையாபுரிக்கு மார்பு அடித்துக்கொண்டது. அவன் கால்கள் வேகமாகச் செல்லத் தொடங்கின. "திருடன்! பிடி! பிடி!" என்று கத்திவிட்டார் மார்த்தாண்டம். திடீரென்று வையாபுரி விழுந்தடித்துக் கொண்டு வேலியைத் தாண்டி ஓட ஆரம்பித்தான்.

"நில்! நிற்கிறாயா இல்லையா?" என்று எதிரில் குரல் கேட்டது. மறு நிமிஷம் ஓர் அழுத்தமான கை அவனைப் பிடித்து நிறுத்தியது. அந்தப் பக்கம் தற்செயலாக வந்த ஹெட் கான்ஸ்டேபிள் வையாபுரியைப் பிடித்து நிறுத்திவிட்டான். "அகப்பட்டுக் கொண்டாயா, பயலே! கையில் எதை எடுத்துக் கொண்டு ஓடுகிறாய்? இப்பொழுதுதான் கவனித்தேன், குழந்தை படத்தைக் காணோமே என்று? நீயா எடுத்துக்கொண்டு போகிறாய்?" என்றார் அங்கே வந்து சேர்ந்த மார்த்தாண்டம்.

"படத்தையா திருடினான்?" என்று கேட்டான் ஹெட் கான்ஸ்டேபிள்.

"நான் திருடவில்லை?" என்றான் வையாபுரி.

"வெறும் படமாயிருந்தால் திருடுவானா? வெள்ளி பிரேம் போட்டிருக்கிறதல்லவா?" என்றார் மார்த்தாண்டம். வையாபுரி நிஜத்தைச் சொல்லிவிடலாமா என்று பார்த்தான். ஆனால் இவ்வளவு அமளிதுமளிப் பட்டும் சண்பகம் வெளியில் வரவில்லையல்லவா? பேசாமல்தானே வீட்டிற்குள்ளே வாயை மூடிக் கொண்டிருக்கிறாள்? நிஜத்தைச் சொன்னாலும் யார் அதை நம்புவார்கள்? மேலும், நிஜத்தைச் சொல்வதனால் சண்பகத்துக்கும் சனியன் பிடித்துக் கொண்டால் என்ன செய்கிறது? தன்னையும் சிறையில் போட்டு, அவளையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டால் அதில் யாருக்கு லாபம்? ஒருவேளை சண்பகம் "அதெல்லாம் சுத்தப் பொய்!" என்று சொல்லிவிட்டால், நல்ல உதைதான் கிடைக்கும்!

வையாபுரியைத் தஞ்சாவூர் 'லாக்அப்'பில் போட்டார்கள். அவன் மேல் வழக்கு நடந்தில் ஆறு மாத சிறைவாசத் தண்டனை கிடைத்தது.

* * *

நாலைந்து நாட்கள் கழித்து சண்பகம் எல்லோருடனும் ஊருக்குத் திரும்பி வந்தாள். அவள் வையாபுரியை எப்படியும் பார்க்கலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தாள்.

"குமாருவின் படம் எங்கே?" என்று ஒரு நாள் சிவகாமியம்மாள் கேட்டதும் நிர்ஜீவனாகி விட்டாள் சண்பகம். "பெட்டியில் வைத்திருக்கிறேன்!" என்று பதில் சொன்னார் மார்த்தாண்டம் பிள்ளை. அத்தையைச் சமாதானப் படுத்துவதற்காக அவர் அப்படிச் சொல்கிறாரென்று நினைத்தாள் சண்பகம். திருடன் வந்து படத்தை எடுக்க முயற்சித்ததைச் சொன்னால் சிவகாமியம்மாள் குய்யோ முறையோ என்றுகத்த ஆரம்பித்துவிடுவாளாதலால், திருட்டு நடந்த விஷயத்தை மட்டும் வீட்டில் ஒருவருக்கும் தெரியக் கூடாதென்று மார்த்தாண்டம் கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருந்தார்.

"படம் எங்கே?" என்ற கேள்விமட்டும் சண்பகத்தை வாட்டிக் கொண்டேயிருந்தது. ஒரு மாதம் ஆயிற்று! வையாபுரியைக் காணாமல் அவள் ஒவ்வொரு நிமிஷமும் துடித்தாள்.

* * *

ஏழுமாதங் கழித்துத்தான் சண்பகத்தின் மனதில் அத்தனை நாளாய் உறுத்திக் கொண்டிருந்த கேள்விக்கு விடை கிடைத்தது. இந்த ஏழு மாதத்திற்குள், மார்த்தாண்டம் பிள்ளையின் தூண்டுதலின் பேரில் சண்பகத்திற்கும் ஹெட்கான்ஸ்டேபிள் காசிமநிராத பிள்ளைக்கும் கல்யாணம் நடந்தேறிவிட்டதென்பதை இங்கே குறிப்பிடவேண்டும். சண்பகம் கல்யாணத்திற்கு எவ்வளவோ ஆட்சேபனை செய்து பார்த்தாள்; ஒன்றும் பலிக்கவில்லை.

காசிமநிராதனும் சண்பகமும் அன்று தஞ்சாவூர் கடைத் தெருவில் போய்க்கொண்டிருந்தார்கள். காசிமநிராதன் யாரோ ஒருவனைப் பார்த்துத் திடுக்கிட்டு நின்றான். "சண்பகம்! அதோ அவனைப் பார்த்தாயா?" என்று சுட்டிக் காண்பித்தான். அந்த மனிதனும் அவர்களைப் பார்த்துவிட்டுக் கல்லாகி நின்றுவிட்டான். "சண்பகம்! இவன்தான் திருடன் வையாபுரி. இப்பொழுதுதான் அவன் சிறையிலிருந்து வந்திருக்கவேண்டும்" என்றான்.

"திருடனா?" என்று கேட்டாள் சண்பகம்.

"ஆமாம், உங்கள் ஊரில்தான் திருடினான். அதுவும் உங்கள் வீட்டிலேயேதான் திருடினான்! ஒரு வெள்ளி பிரேம் போட்ட படத்தை! இவனை நான்தான் கையும் களவுமாகப் பிடித்தேன்" என்றான் பெருமையுடன்.

"நீங்கள்தான் பிடித்தீர்களா?" என்றாள் கம்பிய குரலில் சண்பகம்.

"ஆமாம், சண்பகம்! நானேதான்! என்னைத் தவிர அவ்வளவு சாமர்த்தியமாய் யாரால் பிடித்திருக்க முடியும்?" என்று சொன்னான் ஆர்வத்துடன்.

"சண்பகம்! சண்பகம்!" என்று அவன் திடீரென்று அலறியபோது, அந்தப் பெண் மயங்கிக் கீழே விழுந்துகொண்டிருந்தாள்!



உண்மையான
தேயிலைக் குறிப்புகள்
தேநீர் மூலம் உயிர் தப்பினன்!
தொப்பி நிறைய தேநீர்!
தேயிலையால் திருமணம்!
ப்ரூக் பாண்ட்



கிராமத்தின் வருங்காலம்

நம் பாரதமக்களில் பத்துப்பேருக்கு 9 பேர் கிராம வாசிகளாயிருக்கின்றனர். நம் நாட்டிலே 7,50,000 கிராமங்களிருக்கின்றன. அவைகளில் 3 கோடி 40 லக்ஷம் குடும்பங்கள் வசிக்கின்றன.

இந்தியா சுயாட்சி பெற்றதும் இக்கிராமங்களின் மீதே முழுக் கவனஞ்செலுத்தப்படும். ஏனெனில் இக்கிராமங்கள்தான் சுதேசத்தின் உண்மை உருவம். நம் நாட்டின் முக்கிய சிறப்பும் இக்கிராமங்களில்தான் அடங்கியிருக்கிறது. காடுகளிலும், மேடுகளிலும் பரந்த சமவெளிகளிலும் மறைந்து கிடக்கும் இக்கிராமங்கள்தான் நம் தேசிய வாழ்வின் ஆணிவேர். ஆகவே, நமது கிராமவாசிகளின் வாழ்க்கையைச் சீர்படுத்தி சிறக்கச்செய்தால்தான் நமது தேசிய ஆஸ்தியையும் இதர வசதிகளையும் சம்பூரணமாக அபிவிருத்தி செய்ய முடியும். கிராமங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வெற்றிபெற்றுக்கொண்டால்தான் ருஷியா, சீனாவைப்போல் நம் பாரதநாட்டையும் புனருத்தாரணம் செய்யமுடியும்.

மகத்தான இப்புனருத்தாரணவேலை சித்திபெற வேண்டுமானால் நகரங்களில் வசிக்கும் படித்த ஆடவரும் பெண்டிரும் ஆயிரக் கணக்கில் கிராமவாசிகளின் மத்தியில்சென்று அவர்களுக்குச் சேவைபுரிய வேண்டும். வேறெவராலும் இந்தக் காரியத்தைச் செய்துமுடிக்க முடியாது.

ஆனால் ஜப்பானியர் நம் நாட்டை ஆக்கிரமித்துக்கொண்டால் படித்தவகுப்பினர் மேற்சொன்ன கிராம சேவையைச் செய்ய வசதியிருக்காது. மேலும் அவ்வேலை வெற்றிகரமாக நடப்பதற்கு வேண்டிய பொருளாதார மார்க்கங்களைப் பற்றிப்பேசுவதற்குக் கூட முடியாது!

இப்பொழுதும், இனிவருங்காலத்திலும் நம் நாட்டில் படித்தவர்கள்தான் கிராமவாசிகளுக்கு வழிகாட்டவேண்டும். நமது கிராமவாசிகளுக்கு நீங்கள் வழிகாட்டுங்கள். அவர்கள் ஜப்பானியரை எதிர்த்து நிற்பார்கள்.

நீங்களே யோசித்துப்பார்த்து ஒன்றுபட்டு உழையுங்கள்

அதுதான் தேசியப் போர் முனை

CPU.6 B.TM

மாங்கல்ய பலம்

[ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்]

பிப்ரவரி மாசம் 11-ஆம் தேதி, வியாழக்கிழமை காலை வழக்கம்போல் காப்பியைக் குடித்துக் கொண்டே 'என்ன புதிய யுத்தச் செய்தி' என்று பத்திரிகையைப் பிரித்தோம். சிங்கப்பூர் வீழ்ச்சிக்கும் மேலான 'திடுக்கிடும் செய்தி' ஒன்று கிடைத்தது. காந்தித் தாத்தா உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்து விட்டார். வயது 74: 21 நாள் பட்டினி!

அன்று பிட்டுக்கு மண் சுமந்த சுந்தரேசர் முதுகில் விழுந்த அடி மதுரை வாசிகள் அனைவரையும் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டதாம். அது போலச் சென்னை வாசிகளை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது இந்த உபவாசச் செய்தி. என்ன செய்தும் என்ன? மனம் நிம்மதியடையவில்லை.

'காந்திஜியின் உடல் நிலை மிக்க மோசமாகிவிட்டது' என்ற செய்தி சனிக்கிழமை மாலைப் பேப்பரில் வந்ததுதான் தாமதம். காட்டுத் தீப்போல் எங்கும் பரவிச் சென்னை மக்களின் உள்ளத்தையும் தீக்க ஆரம்பித்தது. ஓடினோம் ஆலயங்களுக்கு. முற்றுகையிட்டோம் பேப்பர் ஆபீஸ்களை. ரேடியோக்கள் திருப்பிய வண்ணமிருந்தன. பட்டணத்துப் பிரமுகர்கள் வீடுகளைப் பலமுறை வலம் வந்தோம். பயன்: கணக்கில்லாத தந்திகளும் லண்டனுக்குக் கேபின்களும்.

காலராத்திரிதான் அன்று இரவு. பலமுறை படுக்கையில் எழுந்து உட்கார்ந்து பிரார்த்தனை செய்து கொண்டோம். உரக்க யாரேனும் பேசினாலும் திடுக்கிட்டு விழித்து, 'என்ன? என்ன?' வென்று வினவினோம். ஒவ்வொருவர் வீட்டிலும் ஏதோ துக்க சம்பவம் நிகழ்ந்து விட்டது போன்ற உணர்ச்சி. எதைக் கண்டாலும் வெறுப்பு. ஒரே கவலை — ஒரே ஏக்கம்.

சீதையைத் தேடி ராமன் லங்கைக்குப் போனான். ஒரு மகா சமுத்திரம் குறுக்கிட்டது. உடன் வந்த வானர சேனை லங்கைக்குள் புகவேணுமென்று துடித்துக் கொண்டிருந்தது. ராமனோ வினயத்துடன் வழிவிடும்படி பிரார்த்தித்துக் கொண்டான் சமுத்திர ராஜனை. அந்த அலைகளின் கோஷங்களுக்கிடையே பிரார்த்தனை காதில் விழவேயில்லை. தர்ப்பையை விரித்துப் படுத்துப் பிராயோபவேசம் செய்யத் துணிந்தான் புருஷோத்தமன்.

பலாத்காரமின்றிப் பிறரை இணங்கும்படி செய்வதற்குப் பட்டினி கிடப்பது ஒரு புராதன வழக்கம் நம் தேசத்திலே. நமது கோரிக்கை நிறைவேற, நமக்குள்ள பேரவாவை வெளியிட, இது ஒரு முக்கிய சாதனம். பிறர் மனசை இளகச் செய்வதற்கும் ஒரு வழி. ஆத்ம பலத்தைச் சோதிக்கும் ஒரு புனித விரதம் இது. பழைய பாவம், பழி தீர்ந்து புது வாழ்வு வாழ்வதற்கும் ஏற்ற சாதனம். பிறர் பாவம், குறைகள் தீரவும் தக்க பிராயச்சித்தம்.

இத்தகைய உண்ணாவிரதத்தை இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் காந்திஜி மேற்கொண்டதும், எங்கள் மனம் பூனாவுக்கும் மதராஸுக்குமாக ஊஞ்சலாடிற்று. கடைசியில் பூனாவுக்குப் போய்த் தரிசனமாவது செய்து வருவதென்று முடிவு செய்தோம்.

சனிக்கிழமை காலை எக்ஸ்பிரஸில் புறப்பட்டோம். வண்டித் தொடர் வழக்கம்போல்தான் போய்க் கொண்டிருந்தது. ஆனால் எறும்புபோல் ஊர்ந்து சென்றதாகவே எங்கள் உணர்ச்சி. ஸ்டேஷன்களில் யாராவது தெரிந்தவரைச் சந்தித்தால் மகாத்மாவின் தேக நிலைமையைப் பற்றிக் கேட்க வேணுமென்ற ஆவல். எட்டி எட்டிப்



அன்னை கஸ்தூரிபாய் காந்தி

பார்த்துக் கொண்டே போனோம். ரயில்களில் ரேடியோ ஏன் இருக்கக் கூடாது?

ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்குப் பூனா ஸ்டேஷன் வர, 'அப்பாடி!' என்று ஒரு பெருமூச்சு விட்டோம். மகாத்மாவின் அருமைப் புதல்வர், தென்னாட்டுக்கே மாப்பிள்ளையெனப் பாராட்டப்படுகிறவர், தேவதாஸ் காந்தி எங்களை அன்புடன் வரவேற்று, மகாத்மாவின் உடல் நிலையைப் பற்றிய கவலையைத் தீர்த்து வைத்தார்.

ராமேச்வரம் சென்றாலும் சனீச்வரன் விடுகிறதா? அன்று மாலைவரை அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருந்தோம்.

சரியாய் 4-30 மணிக்கு ஒரு டாக்ஸியில் ஆகாகான் அரண்மனைக்குப் புறப்பட்டோம். கேட் வாசலில் ஏற்கெனவே பத்துப் பதினைந்து கார்கள் நின்று கொண்டிருந்தன. சுமார் 60, 70 பேர் குழந்தைகள், ஸ்திரீகள் உட்பட அங்கே வெயிலில் காத்துக் கொண்டிருந்தார்கள்.

5-30 மணிக்கு உள்ளே செல்ல அனுமதி கிடைத்தது. முதல் கேட்டைத் தாண்டி உட்செல்ல, முள்ளுக் கம்பிகள் போட்ட மற்றொரு கேட் தென்பட்டது. அங்கும் ஆயுதபாணிகளான சிப்பாய்கள் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

விசாலமான தோட்டத்தின் நடுவில் இருந்த அந்த மாளிகையின் ஒரு அறையிலே, கட்டிலில் உடல் முழுதும் தூய வெள்ளைக் கதர் போர்த்துப் படுத்துக் கொண்டிருந்தார் மகாத்மா. அவர் கால் மாட்டில் போய் நின்றோம். தலையில் மண் பட்டி கட்டியிருந்தது. முகம் மட்டும் முன் போலவே தேஜோமயமாகத் துலங்கிற்று, ஒளி வீசிய கண்களுடன். எங்கள் கண்ணுக்குப் படுக்கையில் உடல் இருந்ததாகவே தென்படவில்லை. எங்களைக் கண்டதும் அவர் புன்முறுவல் பூத்தார்.

என்ன, என்னமோ பேச வேணுமென்று நினைத்துக்கொண்டுதான் சென்றோம். ஆனால் அவரை இந்த நிலையில் கண்டதும் தொண்டை அடைத்துக் கொண்டது; வாய் பேச மறுத்தது. பாதத்தைத் தொட்டு வணங்கினோம். கணீரென்ற தெளிவான குரலில் மிகப் பரிவுடன் எங்கள் சொந்த க்ஷேம லாபங்களை விசாரித்தார் மகாத்மா. பதிலுக்கு ஏதோ குழறினோம். அவரைப் பேச வேண்டாமென்று வேண்டிக் கொண்டோம். சென்னை மாதர்கள் அவருக்காகப் பிரார்த்தனை செய்து வருவதாகச் சொன்னோம். அவர் வந்தனம் தெரிவித்தார். இதற்குள் மூன்று நிமிஷங்களாகி விட்டனவாம்.

அறையின் வெளியே வந்து அன்னை கஸ்தூரி பாயைத் தரிசித்தோம். அவர் முகத்திலும் அபூர்வமான சாந்தம். பொறுமையே உருக்கொண்டு வந்தது போலத் தோன்றினர். அவரும் ஆர்வத்துடன் எங்கள் சுக துக்கங்களையே விசாரித்தார். அவரை விட்டுப் பிரிய மனமில்லாமலே வெளியே வந்து விட்டோம். கஸ்தூரி பாயின் மாங்கல்ய பலமே காந்திக்கு இம்முறை புத்துயிர் அளித்த தென்பது எங்கள் அபிப்பிராயம்.

ஆகாகான் அரண்மனை வாசலின் கனத்த கதவுகள் மார்ச்சு மாதம் மூன்றாம் தேதி முதல் மறுபடியும் மூடிக் கொண்டன. மகாத்மா மறுபடியும் திரை மறைவிலே போய்விட்டார். நாங்கள் ஊர் வந்து சேர்ந்தோம்.



உலகத்தின் எதிர்காலத்தை விளக்கும் அரிய புத்தகம்.

1943 ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து உலகத்தில் பெரிய பெரிய மாறுதல்கள் ஏற்படப் போகின்றன. வேத சாஸ்திரங்களிலும், முஸ்லிம் கிறிஸ்தவ புனித நூல்களிலும் இதற்கு ஆதாரங்கள் உள்ளன. விவரங்களுக்கு ஆசிரியர் ஸ்ரீ பரமஹம்ஸ ராஜநாராயண் ஷட்சாஸ்திரி எழுதியுள்ள 'சேதாவனி' (தமிழ்) என்னும் அரிய புத்தகத்தைப் படியுங்கள்.

விலை ரூ. 1—4—0. (தபால் செலவு தனி.)

இப்புத்தகத்தின் முதல் பதிப்பு அதிவிரைவில் விற்பனையாகி விட்டபடியாலும், இப் புத்தகத்திற்காகத் தினசரி ஏராளமாக ஆர்டர்கள் வந்து கொண்டிருப்பதாலும் தற்போதைய அசாத்தியமான காகித விலையையோ, அச்சடிக்கும் செலவுகளையோ பொருட்படுத்தாமல் புத்தக நேயர்களின் திருப்தியையே கோரிக்கையாகக் கொண்டு இரண்டாம் பதிப்பு தயாரித்திருக்கிறோம்.

வி. பி. பாரங்கள் கிடைப்பது மிகவும் ஸ்ரமமாக இருப்பதால் தயவு செய்து ரொயத்தை மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்புங்கள். ஏற்கெனவே பழைய விலையில் ஆர்டர் கொடுத்திருக்கும் நேயர்களை இப்பொழுது புதிதாக ஆர்டர் கொடுக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

பிரசுரகர்த்தர்கள்:— MARUTHI BOOK DEPOT, GUNTUR (M & S. M. Ry.)

ஏழைகளின் உதவி நிதிச் சங்கம்,

அம்பாசமுத்திரம்



30 - 3 - 1943 செவ்வாய்

மாலை 6 மணிக்கு

கோகிலகான இசைவாணி

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

பாட்டுக் கச்சேரி

★

தயவு செய்து உங்கள் இடங்களை முன் கூட்டியே ரிஸர்வ் செய்து கொள்ளுங்கள்

Secretary,
THE POOR RELIEF ASSOCIATION,
AMBASAMUDRAM.

அழியாத இந்திய ஜோதி!

பேரொளி வாய்ந்த கற்புக் கரசி, தூய நலம் பெற்றவள் உலகம் போற்றும் உத்தமி, மணமகளின் லட்சிய தெய்வம், அக்னி தேவன் அஞ்சி நடுங்கும் பதிவிரதை, இம்மாதரசியின் வைபவத்தைக் கண்டு களியுங்கள்.

★

செருகளத்தூர் சாமா
யூ. ஆர். ஜீவரத்னம்
என். எஸ். கிருஷ்ணன்
காளி. என். ரத்னம்
எஸ். டி. சுப்பையா

★



★

ஹொன்னப்ப பாகவதர்
எம்.ஆர். சந்தானலக்ஷ்மி
டி. ஏ. மதுரம்
பி. எஸ். சிவபாக்கியம்
கே. கே. பெருமாள்

★

★

பாட்டு : பாபநாசம் சிவன்

டைரக்ஷன் : M. L. டாண்டன்

சம்பாஷணை : டி. வி. சாரி

★

இனிய கானம்! திடுக்கிடும் சம்பவம்!! அற்புதக் காட்சி!!!

விரைவில் வெளிவரும்!

★ திவான் பகதூர் ★

தமிழ்ப் படத்தில் புதுமை, சமூகத்திற்கு சாட்டை, விறுவிறுப்பான சம்பாஷணை, களிப்பூட்டும் பாடல்கள், தேர்ந்த நடிகர்கள்

: விவரங்களுக்கு :

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்.,

சேலம் :: மதுரை.

மகத்தான புராணப் படம்!

காரைக்கால்
அம்மையார்

★

நடிகர்கள்:

B. சரஸ்வதி, K. சாரங்கபாணி, V. A. செல்லப்பா, காளி N. ரத்தினம், T. S. துரைராஜ், கொளத்து மணி, P. ராமையா சாஸ்திரி, T. S. ஜயா, R. லக்ஷ்மி, C. T. ராஜகாந்தம், கல்யாணி முதலியோர்

சிவ நடனம்:

S. நடராஜ் & A. R. சகுந்தலா

★

பாட்டுகள்: பாபநாசம் சிவன்

வசனம்: G. S. பாகவதர்

சங்கீதம்: G. கோவிந்த ராஜுலு

டைரக்ஷன்:

ஸி. வி. ராமன், பி. ஏ., எல். எல். பி.

கோவை கந்தன் ஸ்டுடியோவில்

தயாராகிறது

: விவரங்களுக்கு :

கந்தன் கம்பெனி, கோவை:

சேலம், கோயமுத்தூர், மலபார், கொச்சி, திருச்சி, ஆந்திரா, மைசூர், வடஇந்தியா

சீனிவாஸ் பிலிம்ஸ், மதுரை:

மதுரை, ராமனாதபுரம், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவாங்கூர்.

கஸ்த்தூரி பிலிம்ஸ், வேலூர்:

செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு.

ஸி. வி. ராமன், கோவை:
மதராஸ் ஸிடி.

ஸிலோன் தியேட்டர்ஸ், கொழும்பு:
ஸிலோன்.

Regd. No. M. 4392

Editec, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.